Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-1761)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 27 (18.04.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :200

# அமைச்சரவை நியமன இழுபறி நிலைக்கு

# கண்டிப் பேச்சுக்களில் தீர்வு கிடைத்ததா?

## இருதரப்பிலிருந்தும் முரண்பாடான தகவல்கள்

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பிக்கும், ஜனாதிபதி சந்திரிகாவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் அமைச்சர்கள் நியமனம் தொடர்பாக ஏற்பட்ட இழுபறிக்கு தீர்வு காண நடத்தப்பட்ட பேச்சுக்கள் குறித்து இரண்டு தரப்புக்களும் முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்துள்ளன.**

**ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் இந்தப் பேச்சின் மூலம் சுமுகத் தீர்வு காணப்பட்டதாக தெரிவித்த நிலையில், ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் இதை நிராகரித்துள்ளார். இதனால் கொழும்பு அரசியலில் நெருக்கடிகள் அதிகரித்து வருவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஜே.வி.பி உயர் மட்டத் தலைவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற பேச்சுக்களையடுத்து இரு தரப்புக்கும் இடையில் நிலவி வந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டதுடன், அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கவும் ஜே.வி.பி முன்வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் நான்கு அமைச்சர் பதவிகள் மற்றும் நான்கு பிரதி அமைச்சர் பதவிகள் ஜே.வி.பிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

ஜே.வி.பிக்கு ஒதுக்கப்பட்ட விவசாய அமைச்சுப் பதவிக்குள் மகாவலி, கலாசார அமைச்சுப்பதவிகளையும், திரைப்படக் கூட்டுத்தாபன பதவிகளும் உள்ளடக்கப்படாததை ஆட்சேபித்து, ஜே.வி.பி உறுப்பினர்கள் தமது அமைச்சுப் பதவிகளை ஏற்கமறுத்தனர்.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் அதிகரித்திருந்தது. இதையடுத்து ஜனாதிபதி சந்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வயது குறைந்த 40 சிறுவர்கள் திருகோணமலையில் ஒப்படைப்பு!



தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற் துறையினரால் வயது குறைந்த 40 போராளிகள் யுனிசெப் நிறுவனத்தினரிடம் கையளிக்கப்பட்டனர்.

நேற்று மதியம் 31 பெண்போராளிகளும் 9 ஆண் போராளிகளுமே இவ்வாறு கையளிக் கப்பட்டவர்களாவர். இதற்கான ஆவணங்களை



விடுதலைப்புலிகளின் சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களின் இணைப்பாளர் மு.தியாகராஜா (பாவரசன்) யுனிசெப் நிறுவன திருகோணமலை இணைப்பாளர் கப்ரியல்லா எல்ரோயிடம் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து யுனிசெப் நிறுவனத்தார் சிறுவர்களை அழைத்துச் சென்றனர். கடந்த 3 வாரங்களுக்கு முன்னரும் 35 சிறுவர்கள் இவ்வாறு திருகோணமலையில் ஒப்படைக் கப்பட்டார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் அம்பாறை நிலைகுறித்து ஆராய்வு!

(மட்டக்களப்பு)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்திற்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், விஷேட அதிரடிப்படைப் பிரிவு, பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து இவர் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்-

அம்பாறையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயவே நான் அங்கு சென்றேன். அங்கு விஷேட அதிரடிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு நிலை நிலவி வருகிறது.

தொடர்ந்தும் சமாதான முயற்சியை முன்னெடுப்பதாயின் இந்த உறவு நிலை மேலும் வலுப்பெறவேண்டும். என்பதற்கான முயற்சிகளையே போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொண்டு வருகிறது எனவும் அவர்

# கண்காணிப்புக்குழு தலைவர் திருகோணமலைக்கு விஜயம்

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புரூவ் ஹொவ்டே நேற்றுத் திருகோணமலைக்கு விஜயம்செய்து படை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

முன்னதாக நேற்று முன்தினம் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்த ஹொவ்டே

இவ்வாறு திருமலைக்கு சென்ற ஹொவ்டே நேற்றுக்காலை 9.30 மணியளவில் திருமலை மாவட்டக் கூட்டுப்படைத் தலைமையகமான பிளான்டன் பொயின்டில் வைத்து மாவட்டக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனைச சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின், பகல் 10.15 மணியளவில் திருமலை மாவட்டக் கடற்படைத்தளபதியையும் கடற்படைத் தளத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இவர்களுக்கிடையிலான சந்திப்பின்போது, தற்போதைய கிழக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவுநாள்

அம்பாறையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயவே நான் அங்கு சென்றேன். அங்கு விஷேட அதிரடிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு நிலை நிலவி வருகிறது.

தொடர்ந்தும் சமாதான முயற்சியை முன்னெடுப்பதாயின் இந்த உறவு நிலை மேலும் வலுப்பெறவேண்டும். என்பதற்கான முயற்சிகளையே போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொண்டு வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுத் திருகோணமலைக்கு விஜயம்செய்து படை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

முன்னதாக நேற்று முன்தினம் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்த ஹௌவ்டே அதன் தொடர்ச்சியாகவே நேற்று திருமலைக்கும் விஜயம் செய்திருந்தார்.

கூட்டுப்படைத் தலைமையகமான பிளான்டன் பொயின்டில் வைத்து மாவட்டக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனைச சந்தித்து கலந்துரையாடினார்.

தளத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இவர்களுக்கிடையிலான சந்திப் பின்போது, தற்போதைய கிழக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர், பிரதியமைச்சர்களுக்கு புதிய ஒழுக்கக்கோவை அறிமுகம்!

## ஜனாதிபதி சந்திரிகா பணிப்புரை

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான புதிய ஒழுக்கக் கோவை ஒன்றை ஜனாதிபதி அறிமுகப்படுத்தியுள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

வாகனங்களைப் பயன்படுத்துவது, பிரத்தியேக அலுவல்கள், பாதுகாப்பு அதிகாரிகள், வெளிநாட்டுப் பயணங்கள், அரசியல் யாப்புச் சபைக்கான நியமனங்கள், அமைச்சர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்தல் அலுவலக நிர்வாகம் போன்றவைகளை உள்ளடக்கிய புதிய ஒழுகக் கோவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஒழுக்கக் கோவைக்கு அமைய அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களை மாத்திரமே பயன்படுத்த முடியும். பாதுகாப்பு அதிகாரிகளுக்காக இரண்டு வாகனங்களைப் பயன்படுத்த முடியும். அவர்களின் தனிப்பட்ட தேவைக்காக அரச வாகனங்களைப் பயன்படுத்த முடியாது.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பிரத்தியேக அலுவலர்களாக அவர்களது மனைவியையோ, பிள்ளைகளையோ அல்லது உறவினர்களையோ நியமிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்காக தகுதி வாய்ந்த இளைஞர்களை நியமிக்குமாறு ஜனாதிபதி கூறுகிறார்.

பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும் பாதுகாப்பு, அதிகாரிகளுக்கு மேலதிகமாக பொலிஸ் அதிகாரிகளையோ, தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளையோ அமைச்சர்களுக்கும், பிரதி அமைச்சர்களும் பாதுகாப்புக்காக வைத்திருப்பது புதிய ஒழுக்கக் கோவையில் தடை செய்யப்பட்டுள்ளது.

புதிய அமைச்சர் ஒருவருக்கு வருடம் ஒன்றுக்கு நான்கு வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களே வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதி நினைவுநாள் பிரதேச மட்டத்தில் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் 16 ஆம் ஆண்டு நினைவுநாளை யாழ்.மாவட்டத்தில் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளை இடம்பெறவுள்ள இந்நிகழ்வுகள் வடமராட்சி, யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி ஆகிய பகுதிகளில் இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் வடமராட்சியில் கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியில் காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை அடையாள உண்ணாவிரதம் இடம்பெறுவதுடன், விசேட பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முத்திரைச்சந்திப் பகுதியில் அமைந்துள்ள கேணல் கிட்டு பூங்காவில் காலை 9 மணி முதல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கேணல் சொர்ணம், கேணல் பானு மட்டக்களப்புக்கு நேரடி விஜயம்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான கேணல் பானு, கேணல் சொர்ணம் ஆகியோர் நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அங்குள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கருணாவுக்கு எதிரான நடவடிக்கைகளில், முக்கிய பங்குவகித்த இந்த இரு தளபதிகளும் நேற்று முன்தினம் மட்டக்களப்புக்குச் சென்றனர்.

இவர்கள் அங்குள்ள பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர். இதன் போது -

கடந்த ஐந்து வாரங்களாக கருணாவின் செயற்பாடுகளால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களைக் கண்டறிந்து - அவர்களுடன் கலந்துரையாடி வருமாறு தம்மை தலைவர் வே.பிரபாகரன் அனுப்பி வைத்ததாகத் தெரிவித்தனர்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

உயிரிழந்த குடும்பஸ்தர் தொடர்பாக

# மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்தியிலுள்ள வின்ஸர் படமாளிகையின் பின்புறமாகவுள்ள கிணறு ஒன்றிலிருந்து இரண்டு ஆண்களின் சடலம் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டது. இவர்களில் ஒருவரான நடராசா சத்தியலிங்கம் என்பவர் காணாமல் போனார் என திருமதி சத்தியலிங்கம் தமது அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்ததாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் குடும்பஸ்தர் தொடர்பான விசாரணைகளை தாம் மேற்கொண்டு வந்தபோதிலும், மேற்படி நபர் தொடர்பான தகவல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை.

ஆனால், சத்தியலிங்கத்தின் சடலம் நேற்று முன்தினம் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது. இந்த மரணம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் அலுவலகத்திற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதன் காரணத்தால் மேற்படி நபரின் மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். (தீ)

# மோதல் சம்பவத்தின் எதிரொலியாக ஒட்டோக்கள் சேவையில் ஈடுபடத் தடை!

இரண்டு இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட தகராறானது மோதலில் முடிவடைந்ததை அடுத்து ஓட்டோ சாரதியான இவர்கள் ஓட்டோ சேவையை நடத்த முடியாதென பொலிஸார் தடை விதித்துள்ளார்கள். இந்தச்சம்பவம் திருநெல்வேலி ஆடியபாதம் வீதிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

ஓட்டோ சாரதிகளிடையே கடந்த புதுவருட தினத்தன்று சிறிய வாய்த்தர்க்கம் ஒன்று இடம்பெற்றுள்ளது. எனினும், மாலையில் இத்தகராறானது அடிதடியில் முடிந்ததினால் இந்தப்பிரச்சினையில் பொலிஸார் தலையிட்டனர்.

ஓட்டோ சாரதிகள் மதுபானம் பாவித்திருந்தமையினால் இது தொடர்பாக கடும் எச்சரிக்கை விடுத்த பொலிஸார், இனிவரும் காலங்களில் ஓட்டோ சாரதிகள் மதுபானம் பாவித்தால் கடும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்பட்டதுடன், தற்காலிகமாக ஆடியபாதம் ஓட்டோ தரிப்பிடத்தில் ஓட்டோக்களை நிறுத்தக் கூடாதெனவும் தடைவிதித்துள்ளனர்.

இந்தப்பிரச்சினை தொடர்பாக ஓட்டோ உரிமையாளர்கள், ஓட்டோ சங்கத்துடன் தொடர்பு கொண்டு இப்பிரச்சினையில் சுமுகமான ஓர் முடிவை எட்ட உதவுமாறு கேட்டுள்ளனர். அதனடிப்படையில் பொலிஸாருடன் கலந்துரையாடல் மேற்கொள்ள உள்ளதாக ஓட்டோ சாரதி ஒருவர் தெரிவித்தார். (205)


## மணமகள் தேவை

**1972 ல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, விசாக நட்சத்திரமுள்ள அழகிய மணமகனுக்கு 5 அடி உயரமுள்ள அழகிய மணமகள் தேவை. சாதகக் குறிப்புடனும், புகைப்படத்துடனும் விண்ணப்பிக்கவும்.**

*ப.கிருஷ்ணமூர்த்தி,*
*(தேவி அச்சக ஒழுங்கை),*
*114/19 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*
**T.P :** *021-2222789.* (716)


## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிற்போடப்பட்டது

நாளை மறுதினம் நடைபெறவிருந்த வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால், எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா அறிவித்துள்ளார்.

# சுதேச மருத்துவம் பிரபலமாவதால்; அதனை அபிவிருத்தி செய்வது அவசியம்!

## மாகாண சுதேச மருத்துவ பணிப்பாளர் தெரிவிப்பு

இன்று சுதேச மருத்துவத்துறை மிகவும் பிரபல்யமடைந்து வருகிறது. இதனால், சுதேச மருத்துவத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கரவெட்டியில் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தை திறந்து வைத்து உரையாற்றிய வட-கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவப் பணிப்பாளர் இந்திராணி தர்மராஜா தெரிவித்தார்.

சித்தமருத்துவத்துறை முன்னாள தலைவரும், சுதேச மருத்துவப் பணிப்பாளருமான பேராசிரியர் எஸ். பவானி தலைமையில் இந்தத்திறப்பு விழா நடைபெற்றது.

சுதேசமருத்துவத்துறைப் பிராந்திய ஆணையாளர் திருமதி எஸ். சிவலிங்கம் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய இந்திராணி தர்மராஜா குறிப்பிட்டதாவது-

வட-கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் இந்த மத்திய மருந்தகம் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுள்வேத மத்திய மருந்தகம் வடமராட்சி மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்றவேண்டும். இந்த மருந்தகத்தின் மேம்பாட்டிற்கு இவ் மருந்தகப் பொறுப்பாளரால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இப்பகுதிமக்கள் ஒத்துழைப்பு நல்க வேணடும். அப்போதுதான் இந்த மத்திய மருந்தகத்தின் முழுமையான பயனை மக்கள் பெறமுடியும் என்றார்.

சுதேச மருத்துவத்துறை பிராந்திய ஆணையாளர் திருமதி எஸ். சிவலிங்கம் உரையாற்றும் போது கூறியதாவது-

சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரிவில் கடமையாற்றும் போது சுதேச மருத்துவத்துறை அபிவிருத்திக்குப் பல திட்டங்களை நான் மேற்கொண்டிருந்தேன். ஆனால், இன்று சுதேச மருத்துவத்துறையை அபிவிருத்தி செய்யவேண்டியது முக்கியமாகவுள்ளது.

பருத்தித்துறையில் ஒரு ஆயுள்வேத கிராமிய வைத்தியசாலை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான காணி கிடைத்ததும் வைத்தியசாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்றார்.

கரவெட்டி பிரதேச செயலாளர் க.கனகரத்தினம், மாகாண சுகாதார சேவைப்பிரதிப் பணிப்பாளர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர், அரச சுதேச மருத்துவ சங்க செயலாளர், ஆயுள்வேதக் கல்லூரி அதிபர் உட்பட பல உரையாற்றினர். (17)

# கவிதைத்தொகுதி நூல் வெளியிடப்பட்டது

கவிஞர் த.ஜெயசீலனின் 'கைகளுக்குள் சிக்காத காற்று' கவிதைத் தொகுதி நூல்வெளியீட்டுவிழா நேற்றுப் பிற்பகல் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு விழாவில், மங்கள விளக்கினை கலை பண்பட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையை திருக்குமரனும், வாழ்த்துரையை கவிஞர் ச.வே. பஞ்சாட்சரமும், அறிமுக உரையை பேராசிரியர் அ.சண்முகதாசும், ஆய்வுரைகளை க.வேல்தஞ்சன், பேராயர் அதிவணபிதா.எஸ்.ஜெபநேசன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் அ.சண்முகதாசிடம் இருந்து மூதறிஞர் க.சிவராமலிங்கம் பெற்றுக்கொண்டார்.



நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கவிஞர் த.ஜெயசீலனின் 'கைகளுக்குள் சிக்காத காற்று' என்ற கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டின்போது, ஆய்வுரையை பேராயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி.எஸ். ஜெபநேசன் நிகழ்த்துகிறார்.


## சிறுவிளம்பரம்

**தட்டச்சு வகுப்புகள்**

தமிழ்ஆங்கில தட்டச்சு வகுப்புக்கள் புதிய பிரிவு 21.04.2004 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பம். தொடர்பு : **N.S.T.C.A**, ஏழாலை மேற்கு, (உத்தமன் சிலையடி) ஏழாலை. (713)

**காணி விற்பனைக்கு**

சுழிபுரம் குடியிருப்பு, வள்ளியம்மன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள, வீடு கட்டுவதற்குரிய 10 பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது. தொடர்பு : சி.வாசுதேவசர்மா, வீரபத்திர கோவில், வியாபாரிமூலை, அல்வாய். (718)

**கொம்பியூட்டர் பொலிமர் இறப்பர் ஸ்ராம்**
**இலவசம்**
**ஆச்சரியமா?**
**ஏப்ரல் 5 முதல் மே 5 வரை**
**விபரங்கள் அறிய**
**யசோ**
*கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.*
(சி-2395)

**அறிவித்தல்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இராமநாதன் நுண்கலைக்கழகம் - கலைப்பீடம்**

இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை, நடனத்துறை மூன்றாம், நான்காம், வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் 19-04-2004ம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும்.

முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் யாவும் 28-04-2004ம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும். இசை, நடன மாணவர்கள் அனைவரும் குறிப்பிட்ட திகதியிலிருந்து விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

பதிவாளர். (சி/2473)

**Employment Opportunity**
**வேலைவாய்ப்பு**

A Colombo based Construction company is looking for energetic, Interested, qualified persons to participate in the construction of a Water Tower at Kilinochchi. Young Engineers and Technically qualified persons may use this opportunity to be trained in such heavy Civil Engineering construction works.

நீர்தாங்கி நிர்மாண வேலைகளுக்காக பின்வரும் பதவிகளுக்காக ஆர்வமுள்ள, தகுதியானவர்களை சேர்த்துக்கொள்ள உள்ளதால் அவர்கள் பின்வரும் முகவரிகளில் அமைந்துள்ள எமது அலுவலகங்களில் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

| | |
|---|---|
| பொறியியலாளர்கள் | **Engineers** |
| தொழில் நுட்பவியலாளர்கள் | **Technical assistants** |
| அலுவலக உதவியாளர்கள் | **Office Assistants** |
| மேசன்மார் | **Masons** |
| தச்சு தொழிலாளர் | **Carpenters** |
| தொழிலாளர் | **Labourers** |

வலன்ஸ் எஞ்சினியறிங் சேவிசஸ் (பிறை) லிமிடெட்
Valence Engineering Services (Pvt) Ltd

Talakoduwa Gardens, Colombo-5 — 234, Main Street, Jaffna.

Water Supply Project, Kilinochchi — Tel: 021 222 3381, 077 7110284, 071 2522902

Unity Agency Chavakachcheri — 077 6237979

**Apply Before 01-05-2004 இற்கு முன் விண்ணப்பிக்கவும்**

திட்ட முகாமையாளர்
வலன்ஸ் எஞ்சினியறிங் சேவிசஸ் (பிறை) லிமிடெட்,
நீர்விநியோகத்திட்டம், கிளிநொச்சி. (717)

**நாகம்ஸ்** சுன்னாகம்



விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த A.R ரஹ்மானின் இசையில்
(சி-2397)
**தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)**

**நிறஞ்சனாஸ்** சங்கானை
**கமல் (இருவேடம்) மனிஷா** நடித்த **இந்தியன்**
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
**Maid in ManHatton**
(சி-2386)

**ராஜா** யாழ்ப்பாணம்.
**இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த**
**கில்லி**



காட்சி நேரம் : **10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)**
(சி-2387)

**எரிக்கணேஷ்**

◉ இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து முகப் பொலிவிற்கேற்ப நவீன டிசைன்களினாலான பிறேம்களைப் பெற்றுக்கொள்ளவும்.
◉ பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோகிறே லென்ஸ் என்பவற்றைக் குறைந்த விலையில் பெற்றிடவும்.

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**பிளாஸ்ரிக் லென்ஸ் விரும்பிய நிறங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

**மாணவர்களுக்கு விசேட கழிவு உண்டு.**

**எரிக்கணேஷ்**
பல்மூக்குக் கண்ணாடி அகம்.
566,564, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**கிளைகள்:**
இல.91, K.K.S. Road, Kokuvil. T.P: 222 5233
இல.80, K.K.S. Road, Chunnakam.
(சி/2472)

# கருணாவுடன் செயற்பட்டோருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது!

## தலைவரின் கண்டிப்பான உத்தரவு என்கிறார் ரமேஷ்



(மட்டக்களப்பு)

கருணா குழுவுடன் இணைந்து செயற்பட்ட எவருக்கெதிராகவும் நாம் நடவடிக்கை எடுக்கமாட்டோம்.

இது தொடர்பாக மனிதாபிமான ரீதியில் எம்மை அணுகுமாறு தலைவர் கண்டிப்பான அறிவுறுத்தல்களை எமக்கு வழங்கியுள்ளார் என மட்டு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி கேணல் ரமேஷ் தெரிவித்தார்.

தமிழ்நெற் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த நான்கு நாட்களுக்கு முன் மட்டக்களப்பு மாவட்டம் கருணா குழுவினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. தற்போது அது எமது கட்டுப்பாட்டில் உள்ளது.

கருணா குழுவுடன் இணைந்து செயற்பட்ட பெரும்பாலானவர்கள் மீளவும் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். அத்துடன் கிழக்கில் பழைய - சுமுகமான நிலையை ஏற்படுத்த நாம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

இராணுவப் பிரிவு தேசியத்தைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்த வேண்டும். அது பொதுமக்களின் விவகாரங்களில் தலையிடக்கூடாது. ஆனால், பொதுமக்கள் உறுதியான சட்டம், ஒழுங்குமுறை மூலம் வாழ்வதை கருணா ஏற்கவில்லை.

தமிழீழ நீதிமன்றம் மற்றும் தமிழீழ காவல்துறை என்பன விரைவில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளன.

இதன்மூலம் பொதுமக்களின பிரசசினைகளை அவை கையாளும் எனவும் கேணல் ரமேஷ் மேலும் தெரிவித்தார்.



இராணுவ மின் பொறியியல் படைப்பிரிவினால் உற்பத்திசெய்யப்பட்ட ஐந்து பவல் கவச வாகனங்களையும் நேற்றுமுன்தினம் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல - விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் நிமால் லெகேயிடம் கையளிப்பதையும், கவச வாகனங்களை இராணுவத் தளபதி பார்வையிடுவதையும், கையளிக்கப்பட்ட வாகனங்களையும் படங்களில் காணலாம்.

# தமிழ்த் தேசியம் என்ற நிலைப்பாட்டில் நீலன் இறுதிவரை உறுதியாக நின்றவர்!

## அஞ்சலிக் கூட்டத்தில் நியூட்டன் உரை

(கிளிநொச்சி)

துரோகி கருணாவின் பிரதேசவாதத்திற்கு துணைபோகாது எமது தலைவரின் உறுதியான தலைமைத்துவத்தின் மீது உறுதியாக நின்று தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற இறுதிவரை உழைத்ததனால் தான் மட்டக்களப்பு மாவட்டத்தின் புலனாய்வுத்துறைப் துணைப் பொறுப்பாளர் நீலன், கருணாவால் சுடப்பட்டார்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் உறுப்பினர் நியூட்டன் தெரிவித்தார். கருணாவால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு. மாவட்ட புலனாய்வுத்துறை துணைப் பொறுப்பாளர் லெப்.கேணல் நீலனின் வித்துடல் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது அங்கு உரை நிகழ்த்துகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

லெப்.கேணல் நீலன் 1984 ஆம் ஆண்டு தனது 19 வயதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளின் ஐந்தாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சியைப் பெற்றார். அன்றைய நாளில் இருந்தே கருணாவுடன் ஒன்றாக புலனாய்வுப் பணியை மேற்கொண்டார். கருணாவுடன் அன்று தொடக்கம் ஒன்றாக நின்று பணியாற்றிய ஒரே வயதுடைய இவருக்கும் கருணாவிற்கும் இடையில் பொறுப்பாளர், என்பதைவிட புரிந்துணர்வு அடிப்படையிலான நட்பு அந்தக் காலத்திலிருந்தே இருந்து வந்தது.

ஆனால் நீலன் ஒரு உறுதியான போராளி. தேசியத்தின் பற்றுதலுடனும் தலைமையின் மீது உறுதியுடனும் செயற்பட்டு வந்தார்.

இந்த நிலையில் கருணாவின் நட்புக்கு மேலாக அவர் தேசியத்தை நேசித்தார் அதனால் கருணாவால் இவரை தன்வசம் ஈர்த்துக்கொள்ள முடியவில்லை. இறுதிவரை கருணாவுடன் நெருங்கிய நட்புடனேய இருந்தார். கருணா பல தளபதிகளுக்கு சலுகைகளை வழங்கி தன்வசம் ஈர்த்தார். ஆனால் நீலன் அத்தகைய சலுகைகளுக்காக தமிழ்த் தேசியத்தை விற்காது உறுதியாக இருந்தார்.

இந்நிலையில் மட்டு. மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் விடுதலைப் புலிகளால் இங்கு அழைக்கப்பட்ட நிலையில், கருணா நீலனுடன் தொடர்பு கொண்டு புலனாய்வுத்துறைப் போராளிகளை ஒழுங்குபடுத்தி சந்திப்பொன்றுக்காக தருமாறு கட்டளையிட்டிருந்தார்.

கருணாவின் நயவஞ்க நோக்கைப் புரிந்துகொண்டு, வன்னி சென்ற மாவட்டப் பொறுப்பாளர் வந்தவுடன் சந்திப்பை ஒழுங்குபடுத்தலாம் அதுவரை பொறுமையாக இருங்கள் என்று கூறி சந்திப்பை ஒழுங்குபடுத்தாது தட்டிக்கழித்து வந்தார் நீலன்.

பின்னர் பொறுப்பாளர் வந்தவுடன் கருணாவால் இவர்கள் அனைவரும் 'எதிரியால் எவ்வாறு சிறைபிடிக்கப்படுவார்களோ அவ்வாறு இவர்களது ஆயுதங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு மக்கள் முன்னிலையில் கைகளை உயர்த்தியவாறு கூட்டிச் செல்லப்பட்டு அவரது முகாமில் அடைத்து வைக்கப்பட்டனர்.

அதில் பல போராளிகள் அங்கிருந்த தளபதிகளின் உதவியுடன் தப்பிவந்தனர். நீலன் தனக்கு உடன்படவில்லை என்ற காரணத்தால் கருணாவால் பழிவாங்கப்பட்டார்.

கருணாவின் துரோகத்தனத்தை நீலனை இத்தகைய நிலைக்கு உருவாக்கியதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். நீலன் கைகள் கட்டப்பட்டுச் சுடப்பட்டார். நீலன் பல சமர்க்களங்களைச் சந்தித்தவர். அதேபோல இராணுவ புலனாய்வு ரீதியாக மட்டக்களப்பில் பணியாற்றினார். இவர் எந்தக்காலத்திலும் தமிழ்த் தேசியத்திற்கு உறுதியானவராக இருந்தார்.

கருணாவால் நீலன் கொலை செய்யப்பட்டதன் பின்னர் இவருடன் கருணா சிறைவைத்திருந்த ஒருவரை சந்தித்தபோது நீலன் தலைமையிடம் கூறுமாறு கூறிய செய்தியை எம்மிடம் கூறினார்.

கருணா என்னை தனது தலைமையின் கீழிருந்து வேலை செய்யுமாறு தொடர்ச்சியாக வற்புறுத்தி வருகிறார். அவருக்கு கீழ் இருந்து வேலை செய்ய நான் தயாராக இல்லை. துரோகியின் கீழ் இருந்து வேலை செய்ய நான் தயாராக இல்லை. அதைவிட நான் சாவதற்கு தயாராக இருக்கிறேன். இந்தத் தகவலை தலைமையிடம் தெரியப்படுத்துங்கள் என்று, தான் தலைமை மீது உறுதியாக உள்ளதை அவரிடம் கூறிவிட்டு சிறையில் இருந்தார். இத்தகைய உறுதிமிக்க போராளியை கருணா வஞ்சகமான முறையில் கொலை செய்துவிட்டார் என்றார்.

## கோஷ்டி மோதலில் மூவர் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலொன்றில் மூவா வெட்டுக் காயங்களுக்கு இலக்காகினர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் காயமடைந்த மூவரும் மாலை 7 மணியளவில் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டதாக களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வெல்லாவெளி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய யுத்தக் கப்பல் கொழும்பு வருகை!

(கொழும்பு)

இந்திய யுத்தக் கப்பலான 'தரங்கனி' நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

நான்கு தினங்கள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் இந்தக் கப்பல், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே இங்கு வந்துள்ளதாக இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

## மட்டக்களப்பு - அம்பாறை அகதிகளுக்கு உதவி வழங்குவது பற்றி ஆராய ஜனாதிபதி செயலகத்தில் கூட்டம்!

(கொழும்பு)

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அண்மையில் இடம்பெற்ற மோதல்களையடுத்து, இடம்பெயர்ந்தோருக்கு நிவாரண உதவிகள் மற்றும் புனர்வாழ்வு அளிக்கும் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக, விசேட கூட்டம் ஒன்று ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஐக்கிய நாடுகளின் சர்வதேச கல்வி நிதியம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயம் மற்றும் புனர்வாழ்வு தொடர்பான நிறுவனங்களின் பிரதிநிதிகள், மூன்று மாவட்டங்களினதும் அரச அதிபர்கள் ஆகியோருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பு - அம்பாறையில் மறுஅறிவித்தல் வரை வரி அறவீடுகள் இல்லையென்கிறார் கௌசல்யன்!

மடடக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் மறுஅறிவித்தல் வரை வரி அறவீடுகள் இடம்பெற மாட்டாது என மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் கௌசல்யன் அறிவித்துள்ளார்.

தமிழீழ தேசிய கொள்கைக்கு அமைவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கௌசல்யன், வரி அறவீடு தொடர்பாக பின்னர் உத்தியோகபூர்வமாக வர்த்தகர்களுக்கு அறியத்தரப்படும் எனவும் தெரிவித்தார்.

மடடக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் வர்த்தகர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பில் ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

புலிகளின் இந்த அறிவிப்புக் குறித்து கருத்து வெளியிட்ட வர்த்தகர்கள் -

கருணாவின் கட்டுப்பாட்டின் கீழ் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்கள் இருந்த காலங்களில் பாரியளவிலான நிதி மோசடிகள் இடம்பெற்றிருக்கலாம் என விடுதலைப் புலிகள் முன்னர் குற்றஞ்சாட்டியுள்ளமையால், இது தொடர்பான விசாரணைகள் முடிவடையும்வரை இந்த மாவட்டங்களில் வரி அறவீடுகளை மேற்கொள்வதை அவர்கள் தவிர்க்கிறார்கள் என்றே கருதுகிறோம் எனத் தெரிவித்தனர்.

## கிழக்கு மாகாணத்திலிருந்து

## இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு!

கிழக்கு மாகாணத்தில் கருணா அணிக்கெதிராக நடத்தப்பட்ட தாக்குதலின்போது இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாண மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிற்கு கொழும்பிலுள்ள தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

இந்த இடப்பெயர்வின் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை, உணவு விநியோகம் எவ்வாறு இருந்தது, மீளத்திரும்பியவர்கள் தொடர்பான தகவல்கள் முதலியவற்றைத் தமக்குத் தருமாறு மனிதஉரிமைகள் தலைமையகம், கிழக்கு மாகாண மனிதஉரிமைகள் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளது.

கிழக்கு மக்கள் இடம்பெயர்ந்த போது ஏதேனும் மனிதஉரிமை மீறல் சம்பவம் இடம்பெற்றதா என்பது தொடர்பாகவும் மனிதஉரிமை ஆணைக்குழு ஆராயவுள்ளது.(01)

## அமைச்சர்கள் மூவர் நேற்றுமுன்தினம் பதவியேற்பு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கவுள்ள அரசில் நியமிக்கப்பட்ட அமைச்சர்களில் மூவர், நேற்றுமுன்தினம் தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

சமய வழிபாடுகளின் பின், தமது அமைச்சின் அலுவலகங்களுக்குச் சென்று அமைச்சர்கள் பொறுப்பேற்றனர்.

நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, தொழில் உறவுகள் - வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் அதாவுட செனிவரத்ன, போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஆகியோரே தமது கடமைகளை பொறுப்பேற்றனர்.

## வவுனியா வடக்குப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஆசிரியருக்கான வதிவிடப்பயிற்சி ஆரம்பம்!

வவுனியா வடக்குப் பிரதேசத்தில் பணியாற்றிவரும் 35 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிட பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. ஆறு மாதங்கள் நடைபெறும் இந்த பயிற்சி நெறிக்கான நிதியை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வழங்குகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு வவுனியா கனகராயன்குளத்தில் மேற்படி வதிவிடப் பயிற்சிநெறி ஆரம்பமானதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்ததின் வவுனியா கிளை தெரிவித்தது.

இந்த நிகழ்வுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் திலகர், இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்டப் பணிப்பாளர் ரமா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையானது ஆறு மாதத்திற்கு - மாதம் தோறும் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தென்னிந்திய நடிகை சௌந்தர்யா பெங்களூர் விமான விபத்தில் மரணம்!

## தேர்தல் பிரசாரத்துக்குச் சென்றபோது சம்பவம்

(பெங்களூர்)

தென்னிந்தியாவில் முன்னைய சினிமா நடி கையான சௌந்தர்யா, நேற்றுக்காலை பெங் களூரில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிரி ழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கர்நாடகத்தைச் சேர்ந்த சௌந்தர்யாவுக்கு சமீபத்தில்தான் திருமணம் நடந்தது.

32 வயதான சௌந்தர்யா தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு என பல மொழிகளில் நடித்துள்ளார். திருமணத்துக்குப் பிறகும் மதுமதி உள்ளிட்ட தமிழ், கன்னடப் படங்களில் நடித்துக்கொண்டிருந்தார்.



இந்தரக விமானத்தில் சென்றபோதே விபத்து நடந்தது

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு ஆதரவாக நடிகை, நடிகையர்கள் களமிறங்கியுள்ள நிலையில் சௌந்தர்யாவும் சமீபத்தில் பா.ஜ.கவில் இணைந்தார்.

அக்கட்சிக்காக கர்நாடகத்தில் தீவிர பிரசாரம் செய்துவந்தார். நேற்று முன்தினம் பெங்களூர் மல்லேஸ்வரம் பகுதியில் இவர் பிரசாரம் செய்தார்.

இந்த நிலையில் ஆந்திர மாநிலம் கரீம் நகரில் பா.ஜ.க வேட்பாளருக்கு ஆதரவாக, பிரசாரக் கூட்டத்தில் பேசுவதற்காக நேற்றுக் காலை பெங்களூரில் இருந்து, 4 பேர் அமர்ந்து செல்லக்கூடிய செஸ்னா - 180 ரக சிறிய விமானத்தில் கிளம்பினார். உடன் அவரது சகோதரர் அமர்நாத் மற்றும் பா.ஜ.க. நிர்வாகி ஒருவரும் சென்றனர்.

அக்னி ஏவியேசன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த இந்த விமானத்தை பா.ஜ.க. வாடகைக்கு எடுத்திருந்தது.

காலை பெங்களூர் புற நகரில் உள்ள, ஜக்கூர் ராணுவ விமானத்தளத்திலிருந்து அந்த விமானம் ஆந்திராவுக்குப் புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்திலேயே அதில் தீப் பிடித்துக்கொண்டது.

இதையடுத்து மிக வேகமாகத் தரையில் மோதி விமானம் வெடித்துச் சிதறியது. விமான தளத்துக்குள்ளேயே அந்த விபத்து நடந்தது. இதில் சௌந்தர்யா, அமர்நாத், விமானி ஜோய் பிலிப்ஸ். ரமேஷ் சதன் என்ற பா.ஜ.க. பிரமுகர் ஆகிய நால்வரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

நான்கு பேரின் உடல்களும் அடையாளம் தெரியாத அளவுக்கு எரிந்து, சிதைந்து போய் விட்டதாக கர்நாடக பொலிஸ் டி.ஜி.பி. மடியாள் தெரிவித்தார்.

ரஜினியுடன் படையப்பாவில் நடித்து தமிழில் பிரபலமான சௌந்தர்யா, தனது சொந்த மொழியான கன்னடத்தில் நிறைய படங்களில் நடித்துள்ளார். கார்த்திக்குடன் பொன்னுமணி, விஜய்காந்துடன் தவசி. சொக்கத்தங்கம், ரஜினியுடன் அருணாச்சலம், படையப்பா, கமலுடன், காதலா... காதலா..., பார்த்திபனுடன் இவன் ஆகிய படங்களில் நடித்துள்ளார். மதுமதி என்ற மாயாஜால படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்.



மொத்தம் நான்கு மொழிகளில் 60 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள அவர் தயாரித்த 'துவீபா' என்ற கன்னடப் படம் கடந்த ஆண்டு தேசிய விருதைப்பெற்றது குறிப்பிடத் தக்கது.

விபத்து குறித்து அறிந்தவுடன் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா, பா.ஜ.க. மாநிலத் தலைவர் அனந்த்குமார் ஆகியோர் பிரசாரப் பணிகளை நிறுத்திவிட்டு சம்பவம் நடந்த விமான தளத்துக்கு விரைந்தனர்.

## ப.சிதம்பரம் - வைகோ பரஸ்பரம் பாராட்டுமழை

ப.சிதம்பரம் மிகச்சிறந்த அறிவாளி. அவர் குறைந்தது இரண்டு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் செல்வார் என, ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ கூறினார்.

ராஜீவ்காந்தி கொலைக்குப்பிறகு வைகோ உள்ளிட்ட விடுதலைப்புலிகள் அனுதாபிகளை கடுமையாக விமர்சனம் செய்தவர் ப.சிதம்பரம். அந்தக்காலம் எல்லாம் இப்போது மலையேறி விட்டது. சிவகங்கையில் போட்டியிடும் ப.சிதம்பரத்தை ஆதரித்து வைகோ தீவிர பிரசாரம் செய்து வருகிறார். சிவகங்கைத் தொகுதியில் பல்வேறு பகுதிகளுக்கு இருவரும் சேர்ந்து பிரசாரம் செய்கிறார்கள். மேடைகளில் இருவரும் அருகருகே அமர்ந்திருப்பதை மக்கள் ஆச்சரியத்தோடு ரசிக்கிறார்கள். வைகோவின் பேச்சில் வழக்கத்தைவிட கூடுதல் காரம்தென்பட ஆரம்பித்துள்ளது. முதல்வர் ஜெயலலிதாவை கடுமையாகச் சாடுகிறார்.

சிதம்பரத்துக்கு ஆதரவாக சிவகங்கையில் வைகோ பேசுகையில் - ப.சிதம்பரம் நாட்டில் மிகச்சிறந்த அறிவாளிகளில் ஒருவர். ஒரு காரியத்தை திட்டமிட்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தும் நிபுணத்துவம் கொண்ட புத்திசாலி. நமது நாடாளுமன்றத்திற்கு இவரைப் போன்றவர்கள் நிறையப்பேர் வேண்டும்.

அவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது சிவகங்கைத்தொகுதிக்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் நல்லது. அவரைச் சாதாரணமாக வெற்றி பெற வைக்கக்கூடாது. குறைந்தது இரண்டு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்திலாவது சிதம்பரத்தை வெற்றிபெறச்செய்து, அவரை நாடாளுமன்றத்திற்கு மக்கள் அனுப்பி வைக்க வேண்டும் என்றார். பேச்சோடு பேச்சாக நடிகர் ரஜினிகாந்தையும் வாரினார் வைகோ. கடந்த 1996 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் போது, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தை ஆண்டவனால் கூட காப்பாற்ற முடியாது என்றார் ரஜினி. ஆனால், அவர் இப்போது எடுத்துள்ள முடிவு அவரது தடுமாற்றத்தையே காட்டுகிறது. ரஜினியின் முடிவு தவறானது என்கிறார் வைகோ.

அதேபோல வைகோ பதிலுக்குப் பாராட்டிவிடுகிறார் ப.சிதம்பரம். பொடாவின் கொடுமைக்குப் பலியான தியாகி வைகோ. பேச்சு சுதந்திரத்துக்காக சிறை சென்றவீரன் வைகோ என்கிறார்.

# இந்திய அணியின் சிறப்பான ஆட்டத்துக்கு கிடைத்துள்ள வெற்றி பாராட்டுக்குரியது!

## பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் பேட்டி

பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் வெற்றி மிகவும் சிறப்பு வாய்ந்தது. என்று இந்திய அணி கப்டன் கங்கூலி கூறினார்.

ராவல்பிண்டியில் நடந்த இறுதி டெஸ்டில் இந்தியா இனிங்ஸ் மற்றும் 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின்மூலம், பாகிஸ்தானுக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டித் தொடரில், இந்தியா 2:1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. அந்நிய மண்ணில் 11 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியா தொடரை வென்றுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் வெற்றி குறித்து, இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்கூலி கூறியதாவது -

கடந்த இரண்டு வருடங்களாக இந்திய அணி - சிறப்பாக விளையாடி வருகிறது. கடைசியாக தொடரை வென்றிருக்கிறது. சில போட்டிகளில் நெருங்கிவந்து, தொடர்வாய்ப்பு வெற்றியை விட்டிருக்கிறோம்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக நல்ல வாய்ப்பை நழுவவிட்டோம்.

பாகிஸ்தான் அணியை அதன்சொந்த மண்ணில் வீழ்த்தி டெஸ்ட் தொடரை வென்றிருப்பது மிகவும் சிறப்பானது. இது குதூகலத்தையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது. இந்த மகிழ்ச்சி கொண்டாட்டம் முடிய சில நாட்கள் பிடிக்குமெனக் கங்கூலி கூறினார்.

இந்தத் தோல்வி குறித்து, பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இன்ஸமாம் கூறியதாவது -

இந்திய அணியின் சிறப்பான ஆட்டத்துக்கு, வெற்றி கிடைத்துள்ளது. எங்களது பந்து வீச்சாளர்கள் எதிர்பார்த்தபடி பந்து வீசவில்லை. வீரர்கள் காயம், தோல்விக்கு ஒரு காரணமாகும். காயமடைந்த அக்தர் - துடுப்பெடுத்தாடிய விதம் ஆச்சரியமாகவிருந்தது.

அக்தர், பந்துவீசியபோது, அவர் கூறியபடி வீரர்களை நிறுத்தவில்லை என்று ரஷீத் லத்திப்பிடம் கூறிய குற்றச்சாட்டு தேவையற்றது. அது அணிக்குப் பாதிப்பு ஏற்படுத்தியிருந்தால் அக்தர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என இன்ஸமாம் மேலும் தெரித்தார்.

தொடர் நாயகன் என்ற விருதுபெற்ற ஷேவாக் கூறுகையில் - இது சிறப்பான வெற்றி. 300 ஓட்டங்கள் குவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் போட்டித் தொடர் மிகுந்த நம்பிக்கை அளித்திருக்கிறது என்றார்.

ஆட்ட நாயகன் விருதுபெற்ற ராவிட் கூறுகையில் - கடைசி டெஸ்டில் 270 ஓட்டங்கள எடுத்தது. எனது கிரிக்கெட் வாழ்க்கையல் மிக சிறந்தநாள். பந்துவீச்சாளர்கள் - சிறப்பாகச் செயற்பட்டார்கள் என்று தெரிவித்தார்.

## டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் இங்கிலாந்து-இந்தியா முன்னிலைக்கு வந்தன

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, டெஸ்ட் அணிகள் வரிசைப்பட்டியலில் - இந்திய அணி நாலாவது இடத்திற்கு முன்னேறியது. டெஸ்ட் அணியின் வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வெளியிட்டுள் ளது. இதில் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றியதன் மூலம், இந்திய அணி ஆறாவது இடத்தில் இருந்து, 102 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

127 புள்ளிகள் பெற்று, அவுஸ்ரேலியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தை 112 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா பிடித்துள்ளது. மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 4 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில், மூன்று போட்டியில் வெற்றியும், ஒரு ஆட்டத்தை சமநிலையிலும் முடித்த இங்கிலாந்து அணி, 103 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. 101 புள்ளிகள் பெற்றுள்ள நியூசிலாந்து 5 ஆவது இடத்தில் உளளது. 3 ஆவது இடத்தில் இருந்த பாகிஸ்தான் 99 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்திலும், மேற்கிந்திய தீவுகள் 82 புள்ளிகளுடன் 8 ஆவது இடத்திலும், ஜிம்பாப்வே 55 புள்ளிகளுடன் 9 ஆவது இடத்திலும், ஒரு புள்ளியுடன் வங்களாதேசம் 10 ஆவது இடத்திலும் உள்ளது.

## 50 ஆண்டுகால கனவு நனவாகியது

# தொடரினைக் கைப்பற்றியமைக்காக இந்திய அணிக்கு 50 இலட்சம் பரிசு!

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய இந்திய அணிக்கு ரூபா 50 இலட்சம் பரிசாக வழங்கப்படும் என்று, இந்திய கிரிக்கெட் சபைத்தலைவர் டால்மியா அறிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி 15 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு பாகிஸ்தான் சென்று, ஒருநாள் மற்றும் டெஸ்போட்டித் தொடரில் விளையாடியது. ஒரு நாள் போட்டித் தொடரை இந்தியா 3:2 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதேபோல் டெஸ்ட்தொடரையும், இந்தியா கைப்பற்றி சாதனைபடைத்தது. 3 டெஸ்ட் போட்டித் தொடரில் ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் நடந்துமுடிந்த இறுதி டெஸ்ட்டில் இந்தியா இனிங்ஸ் மற்றும் 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதன் மூலம் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்தொடரை 2:1 என்ற கணக்கில் தனதாக்கியது. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா வென்று இருப்பது இதுவே முதல்முறையாகும்.

1954 ஆம் ஆண்டு முதல் ஐந்துமுறை பாகிஸ்தான் சென்று, டெஸ்ட்போட்டியில் பங்கேற்றுள்ள இந்தியா - இந்த டெஸ்ட் தொடரில் முல்தானில் நடந்த முதல்டெஸ்ட்டில் பெற்ற வெற்றிதான் பாகிஸ்தான் மண்ணில் இந்திய அணியின் முதல்டெஸ்ட் வெற்றியாகும்.

அதோடு ராவல்பிண்டியில் நடந்த இறுதி டெஸ்ட்டிலும் இந்திய அணி வென்று 50 ஆண்டுகளாக கனவாக இருந்து வந்த டெஸட் தொடர் வெற்றியை நனவாக்கியது.

டெஸ்ட் தொடரை வென்று புதிய சரித்திரம் படைத்த இந்திய அணிக்கு இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அத்தோடு அணியினருக்கு ரூபா 50 இலட்சம் பரிசாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு

# கங்கூலி தலைமையிலான இந்திய அணி கூடிய டெஸ்ட்களில் வென்று சாதனை!



பாகிஸ்தானுக்கு எதிரான 3 ஆவது, மற்றும் கடைசி டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 131 ரன் வித்தியா சத்தில் அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றி மூலம் கப் டன் பதவியில் கங்கூலி புதிய சாதனை படைத்தார். அவர் தலைமையில் இந்திய அணி 15 டெஸ்ட் வெற்றியை பெற்றுசாதனை படைத்துள்ளது. இதற்கு முன்பு இந்திய அணி அசாருதீன் தலைமையில் 14 வெற்றிகளைப் பெற்றதே சாதனையாக இருந்தது.

வெளிநாட்டு மைதானத்தில் கங்கூலி தலைமையில்தான் அதிகபட்சமாக 7 வெற்றி கிடைத்திருக்கிறது. 2000 ஆம் ஆண்டு பங்களாதேசுக்கு எதிராகவும், 2001 ஆம் ஆண்டு சிம்பாவே, இலங்கைக்கு எதிராகவும் 2002 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்துக்கு எதிராகவும், கடந்த ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராகவும், இந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராகவும் கங்கூலி தலைமையிலான அணி அந்நாட்டு மைதானங்களில் வெற்றிபெற்றது.

மற்ற இந்திய கப்டன்களில் வெளிநாட்டு மைதானத்தில் பட்டோடி, பெடி தலைமையில் தலா 3 வெற்றியும், கபில்தேவ், கவாஸ்கர், வடேகர் தலைமையில் தலா 2 வெற்றியும், அசாருதீன் தலைமையில் ஒரு வெற்றியும் கிடைத்து இருக்கிறது.

சி.கே. நாயுடு, விஜய் ஆனந்த், மன்காட், குலாம், அகமது, அதிகாரி, கெய்க்வாட், பங்கஜ்ராய், சந்து போர்டே, வெங்கட்ராகவன், ஜி.ஆர். விசுவநாத், ஸ்ரீகாந்த் ஆகியோர் தலைமையில் இந்திய அணி டெஸ்டில் ஒரு வெற்றி கூட பெற்வில்லை.

கபில்தேவ் தலைமையில் 1986 - 87 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சென்னையில் நடந்த டெஸ்ட் 'டை' ஆனது குறிப்பிடத்தக்கது.

### மின்சாரசபை அலுவலகத்திற்கு

# கிளிநொச்சியில் இடவசதியின்மையால் மின்சாரம் வழங்குவதில் தாமதம்!

மின்சாரசபைக்கான காரியாலயம் இயங்குவதற்கான இடவசதி இன்மையால், கிளிநொச்சி மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்குவதில் பெரும்சிரமம் ஏற்பட்டுள்ளது என வட பிராந்திய மின்சாரசபை அலுவலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் ஜுன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மின்சாரம் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், அந்தப்பகுதிக்கு மின்சாரசபைக் காரியாலயம் நிறுவுவதற்கும், மின்விநியோகிப்பதற்கான மின்பிறப்பாக்கிகளை வைத்து, மின் விநியோகிப்பதற்கும் சரியான இட வசதி இன்னமும் கிடைக்கவில்லை.

பத்திரிகைமூலம் விளம்பரப்படுத்தியும் எவரும் இடம்வழங்குவதற்கு முன்வரவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் மின்விநியோகத்திற்கான மின்கம்பம் நடும் பணிகள் மற்றும் மின்கம்பிகள் இணைக்கும் பணிகள் என்பன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதில் - கணேசபுரம், பரந்தன், கரடிப்போக்கு முதலான பகுதிகளில் மின் இணைப்பு வழங்குவதற்கான சகல பணிகளும் பூர்த்தியாகியுள்ளன.

எனினும், மின் இணைப்பு வழங்குவதற்கான பதிவுகளை மேற்கொள்ளுதல், வீடுகளுக்கு இணைப்பு வழங்குவது முதலான வேலைகளை மேற்கொள்வதற்குப் பணிமனை ஒன்று அமைக்கவேண்டியுள்ளது.

இதற்கு வேண்டிய இடத்தைப் பொதுமக்களே முன்வந்து வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



அல்வாய் அம்பாள் வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் அதிபர் செ.அ.தேவச்சந்திரன் உரையாற்றுவதையும், பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.புஸ்பலிங்கம், இளைப்பாறிய அதிபர் எஸ். கோபாலகிருஷ்ணன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (17)

## நல்லை ஆதீனத்தில் சிறப்புச் சொற்பொழிவு

இலங்கை சின்மயா மிஷன் ஏற்பாட்டில் - மிஷனைச் சேர்ந்த சுவாமி ரமண சைத்தனயாவின் 'மன்னிப்பாயாக' என்னும் சிறப்புச் சொற்பொழிவுகள் நல்லை ஆதீனத்தில் நாளை முதல் தொடர்ந்து 3 நாட்கள் மாலை 5.30 மணியிலிருந்து 7 மணிவரை நடைபெறும்.

முதல்நாள் நிகழ்வு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்கந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் ஆரம்பமாகும். தொடர் சொற்பொழிவு நிகழ்வினை பரமாச்சாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (17)

## யாழ். துரையப்பா விளையாட்டரங்கு பாவனைக்காக திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு மீண்டும் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு, விளையாட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காகக் கடந்தவாரம் முதல் திறக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டரங்கில் கடந்த வாரம் முதல் பல்வேறுபட்ட விளையாட்டுப் போட்டிகள் பிரதேச செயலகங்கள்ரீதியாக நடைபெற்று வருகின்றன.

இன்றுமுதல் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியும் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டரங்கில் - விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கான வசதிகள், போட்டியினைப் பார்வையாளர்கள் இருந்து பார்ப்பதற்கான வசதிகள், தண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் அனைத்தும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், யாழ். மாவட்டத்தில் சர்வதேச தரத்திற்கு அமைவாக 8 சுவடுகளைக் கொண்ட 400 மீற்றர் ஓடுபாதையினைக் கொண்டதாகவும் இந்த விளையாட்டரங்கு புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டரங்கு யாழ். மாநகரசபையின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது. புனரமைக்கப்பட்ட இந்த மைதானத்தைப் பயன்படுத்த யாழ். மாநகரசபை நாள் ஒன்றுக்கு 500 ரூபாவை அறவிட்டு வருகின்றது. (58)



தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி உத்தியோகத்தர் எஸ்.வல்லிபுரநாதன் உரையாற்றுவதையும், வித்தியாலய அதிபர் சவுந்தலாதேவி ஆகியோரைப் படத்தில் காணலாம். (17)

### பனை - தென்னை வள

## உற்பத்திகளை மேம்படுத்த 30 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் தென்மராட்சிப் பிரதேசத்தில் அழிக்கப்பட்ட பனை- தென்னை வளங்களைக் கட்டியெழுப்பி, அவற்றின்மூலமாகப் பனை - தென்னைவள உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு, 30 இலட்சம் ரூபாவை யாழ். செயலகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் இந்தப் பிரதேசத்தில் பனை - தென்னை வளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால், இதனை நம்பி வாழ்கின்ற மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பனை- தென்னை வளங்களைக் கட்டியெழுப்பி, பாதிக்கப்பட்டோருக்கு உதவும் நோக்கமாகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

## பின்தங்கிய பாடசாலை புனரமைப்புக்கு நிக்கொட் நானூறு இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளைப் புனர் நிர்மானம் செய்வதற்கென 400 லட்சம் ரூபா நிக்கொட் நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இயங்கும் நிக்கொட் நிறுவனத்தின் பெரும் திட்டமிடல் அதிகாரியே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளைப் புனரமைப்பதற்கென இந்த ஆண்டு 40 மில்லியன் ரூபாவரையில் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டட வசதிகள் இன்றிச் சிரமப்படும் பாடசாலைகளுக்கே இந்த நிதிமூலம் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

52 மில்லியன் ரூபாய் செலவில் வைத்தியசாலைகள், பாடசாலைகள் மற்றும் வீதிவிளக்குகளை அமைத்தல் முதலான கடமைகளை யாழ். மாவட்டத்தில் நிக்கொட் மேற்கொள்ளவுள்ளது.

மிகமுக்கிய பணியாக யாழ். மாவட்டத்தின் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீதியோரங்களில் 1600 புளோரசஸ்ட் விளக்குகளையும் (ரியூப்லைட்) நூறு சோடியும், தானியங்கி விளக்குகளையும் நிறுவுவதற்கு 7 மில்லியன் ரூபாய் வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் யாவும் எதிர்வரும் ஜுன் மாதம் முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## வருடாந்த மஹோற்சவம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள்வரை நடைபெறவுள்ளது.

மே 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் சித்திரை பௌர்ணமி தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (17)

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள்வரை நடைபெறும்.

மே 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (17)

### புதுவருட தினத்தன்று

## சீட்டிழுப்பில் தெரிவானோருக்கு 500 ரூபா வைப்புச் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டுத் தினத்தன்று சாவகச்சேரியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் 2500 ரூபாவுக்கு மேல் வைப்பிலிட்டோர்களிடையே நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் 5 பேர் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கு 500 ரூபா பெறுமதியான வைப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

சீட்டிழுப்பில் தெரிவானோரின் விபரங்கள் வருமாறு - சின்னராசா பாக்கியம் (மந்துவில் கிழக்கு), கந்தையா யோகநாதன் (கல்வயல்), நவரத்தினம் திருநாவுக்கரசு (மட்டுவில் கிழக்கு), சுந்தரலிங்கம் கஸ்தூரி (மீசாலை ஐயா கடையடி), லோகநாதன் தர்சன் (கண்டிவீதி, சாவகசசேரி).

இவர்கள் தமக்குரிய வைப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் க.இராஜகோபால் அறிவித்துள்ளார்.

புதுவருடத்தினத்தன்று மட்டும் 300 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் 40 இலட்சம் ரூபாவைப்பிலிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (34)

## டெனிஸ் கண்ணிவெடியகற்றும் குழு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது

வடக்கு-கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழுவின் உயர்மட்ட அதிகாரிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

அக்குழுவின் உயர் மட்ட அதிகாரியான நில்ஸ் தலைமையில் வரும் இந்த அதிகாரிகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் இவர்கள் பருத்தித்துறையில் கண்ணிவெடி அகற்றும் பணியைப் பார்வையிடுவர். மறுநாள் வன்னி செல்லும் இவர்கள் பூநகரிப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியைப் பார்வையிட்டபின் வவுனியா, திருகோணமலை மாவட்டங்களுக்கும் செல்வர்.

டென்மார்க், றோட்டறிக் கழகத்தின் மாவட்ட ஆளுநராக நில்ஸ் பணிபுரிகின்றார். இலங்கை விஜயத்தின்போது அவர் கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் றோட்டறியன்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

## கரவெட்டியில் சுதேச மருத்துவ மருந்தகம்

கரவெட்டியில் சுதேச மருத்துவ மத்திய மருந்தகம் ஒன்று, 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தகத்திற்கான காணியைக் கரவெட்டியைச் சேர்ந்த திருமதி எஸ்.விநாயகமூர்த்தி அன்பளிப்புச் செய்துள்ளார்.

இதற்கென 5 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன. இந்த மத்திய மருந்தகம், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் அமைக்கப்பட்டு, அண்மையில் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (17)

### தரம் 9 இற்கான

## பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான சான்றிதழ்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

சென்றவருடம் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 9 மாணவர்களுக்கு நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் யாழ். கல்வி வலயத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

யாழ். கல்விவலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் 2003 ஆம் ஆண்டு தரம் 9 மாணவர்களுக்கான பரீட்சை நடைபெற்றது.

இவர்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் யாழ். கல்வி வலயத்திலுள்ளன. இதனை யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் - எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை பெற்றுக்கொள்ளமுடியும்.

சான்றிதழ்களை எடுத்துச்செல்ல வரும் அதிபர்கள் சென்றவருடம் தரம் 9 இல் கற்று, பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்டுவரவேண்டும் என யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (தீ)

### நெடுந்தீவு - குறிகாட்டுவான்

## படகுகளில் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியமடைகின்றனர்

நெடுந்தீவு - குறிகாட்டுவான் பகுதிகளிடையிலான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் படகுகளில் சீருடையுடனும், சாதாரண உடையுடனும் பயணிக்கும் பொலிஸாரினால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது சீரான பயணத்தை மேற்கொள்ளக்கூடிய ஆசன வசதிகளற்ற சிறிய படகுகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் படகுகளின் பாதுகாப்பான பகுதிகளில் பொலிஸார் ஏற்கெனவே சென்று அமர்ந்துவிடுவதால், பயணிகள பாதுகாப்பற்ற இடங்களில் இருப்பதுடன், பால் வேறுபாடின்றி பொலிஸாருடன் நெருக்கமாகப் பயணிக்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

குழந்தைகளுடன் வரும் பயணிகளுக்குக்கூட இருப்பதற்குப் பாதுகாப்பான பகுதியை வழங்க மறுப்பதால், பெரும் சிரமத்தின் மத்தியில் நெடுந்தீவு மக்கள் பயணத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

படகுகளில் ஆயுதங்களுடனும் இவர்கள் சிலவேளைகளில் பயணிப்பதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)



# விளையாட்டு அரங்கம்

# தூஸ்ரா தோற்றதில்லை

சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் அதி கூடிய விக்கெட்டுக்களை வீழ்த்திய மேற் கிந்திய வீரர் கொட்னிவோல்சின் சாத னையை முறியடிக்க இன்னும் 7 விக் கெட்டுக்களை வீழ்த்தவேண்டிய நிலை யிலுள்ள இலங்கையின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனது சர்ச்சைக்குரிய தூஸ்ரா பந்துவீச்சு பற் றிய அறிக்கை இன்னும் ஒருசில நாட் களில் இலங்கைக் கிரிக்கெட் சபையினால் அறிவிக்கப்படவுள்ளது.

கிரிக்கெட் உலகம் எதிர்பார்த்தது போல் சாதனையை நெருங்கும்வேளை யில், முரளி பந்தை வீசி எறிகிறார் என்ற கிறிஸ்புரோட்டின் குற்



முரளிதரன் – "சோதனை மேல் சோதனை"

றச்சாட்டு பலத்த விமர்சனங்களையும், சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

முரளியின் பந்துவீச்சு முறையற்றது என்கின்ற குற்றச்சாட்டு ஒன்றும் புதிதல்ல. முரளி பந்தை எறிவதாகக்கூறி முதல் முதல் 'நோபோல்' வழங்கிய பெருமை அவுஸ்ரேலிய நடுவரான டரல் ஹெயா ரைச் சாரும். இதையே 1995 - 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்ரேலி யாவுடனான டெஸ்ட் போட்டியின்போது, எமர்ஸன் என்ற நடுவரும் தெரிவித்தார். இதன் காரணமாக முரளி பந்தைவீசி எறிவதாகச் சர்வதேச கிரிக்கெட்சபைக் குப் புகார் செய்யப்பட்டது.

தற்பொழுது முரளியின் 'தூஸ்ரா' என் கின்ற பந்துவீச்சு முறையானது, முன்னரும் முரளியால் வீசப்பட்ட ஒன்றே. முரளி சாதார ணமாக வலக்கைத் துடுப்பாட்ட வீரர்களுக்குப் பந்துவீசும்போது, தரையில் படும் பந்து - வலதுகைத் துடுப்பாட்ட வீரரை உள்நோக்கிச் செல்லக்கூடியதாகவே வீசுவார். ஆனால், முரளியின் தற்போதைய 'தூஸ்ரா' பந்துவீச்சு முறையானது நிலத் தில்பட்ட பின்னர் வலக்கைத் துடுப்பாட்ட வீரரை வெளிவிலத்திச் செல்லும் அதேநேரம், இடக்கைத் துடுப்பாட்ட வீரருக்கு உள்நோக் கிச் செல்கின்றது.

முரளியால் இடக்கைத் துடுப்பாட்ட வீரர் கள் ஆட்டமிழக்கச் செய்யமுடியாது என்கின்ற கருத்தினை 'தூஸ்ரா' பந்துவீச்சுமுறை மாற் றியமைத்துவிட்டது. இங்கிலாந்து டெஸ்ட் ஆரம்பிக்கமுன்னர் 'நான் இம்முறை புதுவித மான பந்துவீச்சுமுறைகளைக் கண்டுபிடித்துள் ளேன். இந்தமுறை எனது பந்துவீச்சுமுறை யில அவர்கள் ஆட்டமிழந்தே ஆகவேண்டும் எனச் சவால்விட்டதுடன், சாதித்தும் காட்டினார்.

முரளியின் பந்துவீச்சுமுறையானது இங்கி லாந்து மற்றும் அவுஸ்ரேலிய டெஸ்ட் தொடர் களில் பல இடக்கைத் துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்ததால், தற்போது முரளி யின் இந்தப் பந்துவீச்சுமுறை பற்றி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முரளியின் சர்ச் சைக்குரிய தூஸ்ரா பந்துவீச்சு - மேற்கு அவுஸ ரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து பல்கலைக் கழகத்தில் சர்வதேச கிரிக்கெட் சபையின் மனித அசைவுகள் நிபுணர்கள் குழு உறுப்பி னரான பேராசிரியர் புரூஸ் எலியட் முன்னிலை யில் பரிசோதனை செய்யப்பட்டது. இந்தப் பரி சோதனை தொடர்பான அறிக்கைகள் தன்னால் இலங்கை கிரிக்கெட்சபைக்கு அனுப்பிவைக் கப்பட்டதாக புரூஸ் எலியட் கூறியபோதும், இலங்கை கிரிக்கெட்சபை அதனை மறுத்துள் ளது.

தற்பொழுது அவுஸ்ரேலியாவிலிருந்து கிடைத்திருக்கும் உத்தியோகபூர்வமற்ற நம் பத்தகுந்த செய்திகளின்படி - முரளியின் புதிய தூஸ்ரா பந்துவீச்சானது சர்வதேச கிரிக்கெட்சபையின் சட்டவிதிகளுக்கு முர ணாக அமைந்துள்ளதாகவே தெரிவிக்கப்படு கின்றது.

முரளியின் தூஸ்ரா பந்துவீச்சானது சர்வ தேச கிரிக்கெட்சபையின் விதிமுறைகளுக்கு அமையவில்லை எனக் கூறக்காரணம் - சாதா ரணமான சுழல்பந்துவீச்சாளர் ஒருவரின் பந்து வீச்சின்போது பந்து கையைவிட்டு விடுபடும் சந்தர்ப்பத்தில், கையைத் தோள்கட்டிலும் பார்க்க மிகக் கூடியளவு 5 பாகை கோணத்திற்கே உயர்த்தமுடியும். மறுவகையில் கூறுவதாயின, பந்துவீச்சாளர் ஒருவரின் கை - பந்து கையை விட்டு விலகிய கணத்தில் நேராகினால், அந்தப் பந்துவீச்சாளர் பந்தை வீசி எறிந்திருக் கவேண்டும் எனக் கருதுவதேயாகும். இந்தக் காரணங்களாலே முரளியின் தூஸ்ரா பந்துவீச் சானது, முறைதவறிய ஒன்று எனக் குறிப்பிடப் படுகின்றது.

சர்வதேச கிரிக்கெட் ஆய்வாளர்களின் கருத்துப்படி - மென்வேகப் பந்துவீச்சாளர்க ளில் பெரும் பாலானவர்களின் கைகளும் பந்துவீச்சின்போது 5 பாகை கோணத்திற்குள் அடங்குவதில்லை என்பதாகும். எனவே, இந்த 5 பாகை என்கின்ற வரையறை நீக்கப்படவேண்டும் என அவர்கள் தெரி விக்கின்றனர்.

இந்தமாதம் 20 ஆம் திகதி சிம்பாப்வே தொடருடன் முரளிதரனின் சர்ச்சைக்குரிய தூஸ்ரா பந்துவீச்சின் இரண்டாவது படி முறை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் தொடரின்போது முரளி மீண்டும் பந்தை எறிகின்றார் என்ற குற்றச்சாட்டுக்கு உள் ளானால், முரளிககுச் சர்வதேச போட் டிகளில் விளையாடுவதற்கு ஒருவருடத் தடைவிதிப்பதற்கான வாய்ப்புக்கள் பெரும் பாலும் உள்ளன.

இங்கு ஒருவிடயம் நோக்கத்தக்கது - முரளியின் பந்துவீச்சுத் தொடர்பாக வேறு எந்த நாட்டு வீரர்களோ, நடுவர்களோ குறை கூறாதபோது - இங்கிலாந்து, அவுஸ்ரேலயா ஆகிய நாடுகள் விளையாடும்போது மாத்தி ரமே முரளியின்மீது குற்றம்சாட்டப்படுகின றது. எனவே, இந்தக் குற்றச்சாட்டு முரளியின்மீது சுமத்தப்படக் காரணம்- அவர் ஒரு வெள்ளையினத்தவராக இல்லாமல் இருப்பதேயாகும் எனக் கிரிக்கெட் விமர்ச கர்கள் கூறுகின்றனர்.

இதேசமயம் இறுதியாக முரளிமீது குற் றஞ்சாட்டியுள்ள நடுவர் கிறிஸ்புரோட் நாண யமானவரல்ல. இவர் இங்கிலாந்து அணிக் காக விளையாடிய காலத்தில், நடுவர் தவ றாகத் தீர்ப்பு வழங்கினார் என்ற கோபத் தில் விக்கெட்டுக்களைக் காலால் உதைத்து உடைத்து 500 பவுண்ஸ் அபராதம் செலுத் தியவர். இவரது பக்கச்சார்புத் தன்மை அண்மையில் இலங்கையுடனான மூன்றா வது டெஸ்டில் ஜஸ்ரின் லாங்கருக்குச் சார்பாக நடந்துகொண்டமையில் இருந்து தெளிவாக அறியலாம்.

முரளியின் தூஸ்ரா பந்துவீச்சானது 'ஒவ் ஸ்பின்னுக்கு' புதியவடிவத்தைக் கொடுத்துள்ளது. சமீபகாலத்தில் கிரிக் கெட்டில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் யாவும் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளது. எனவே, எப்பாடுபட்டாவது தூஸ்ராவைக் காப்பாற்றவேண்டிய பொறுபபு கிரிக்கெட் உலகிற்கு உண்டு.

- லெஸ்லி -

# 47 முதல் 751 வரை

மேற்கிந்திய தீவுகள் அணி 36 வரு டங்களாகப் பெற்றிருந்த ஒரு கௌரவ மான நிலையை இழந்துள்ளது. வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி - மேற்கிந்திய அணியை அதன் சொந்த இடத்தில் மண்கௌவச் செய்துள்ளது. மூன்று டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச் சியாக வெற்றியைப் பெற்று, நான்கு போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொடரையும் 1968 ஆம் ஆண்டுக்குப் பின் கைப்பற்றியுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் தலை வர் லாரா - கிரிக்கெட் டெஸ்தர வரிசை யில் முதல் இடத்தை தக்கவைத்துக் கொணடிருக்கும் ஒரு வீரர். அவர் தலை மையிலான அணிக்கு இந்த தோல்வி மிக வும் கௌரவக் குறைவான ஒன்றாகும் என விமர்சிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நெருக்கடியான நிலையில்தான், லாரா நான்கு ஆண்டுக ளுக்கு முன்னர் தனது அணித் தலைவர் பதவியிலிருந்து நீங்கியிருந்தார்.

ஆனால், சேர் ஹரி சோபர்ஸ் - அணியின் தலைமைப் பதவியிலிருந்து லாரா நீக கப்படவேண்டிய தேவையில்லை எனக் கூறியுள்ளார். எதிரணி வீரர்களைக் குறை வாக மதிப்பிடக்கூடாது எனவும் ஆலோ சனை கூறியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் அந்த அணி தோல்வியடைந்த போட்டிக ளில் அதிகூடிய ஓட்டங்களை பெற்ற வீரர்கள் சிலரேயாவர். ஸ்மித் ஒரு போட்டியில் 108 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். கைண்ட 84 ஓட்டங்களையும், கைல் 62 ஓட்டங்களையும் தொடரின் அதிகூடிய ஓட்டமாகப் பெற்றுள் ளனர்.

இங்கிலாந்து அணியின் ஹர்மிஷன் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு சிம்ம சொற்பனமாக விளங்கியுள்ளார். அவர் முதல் போட்டியின் முதல் இனிங்சில் 2 விககெட்டுக்களையும், இரண்டாவது இனிங் சில் 7 விக்கெட்டுக்களையும் கைப்பற் றியுள்ளார். இரண்டாவது இனிங்சில் 47 ஓட்டங்களுக்கு மேற்கிந்திய அணி சுருண்டு போனது. இதற்கு ஹர்மிஷனின் அற்புதமான பந்து வீச்சே காரணமாய் அமைநதது.

311 ஓட்டங்களை முதல் இனிங்சில் பெற்ற மேற்கிந்தியதீவு, இரண்டாவது இனிங் சில் 47 ஓட்டங்களையே பெற்றது. இங்கி லாந்து அணி 339 ஓட்டங்களையும் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது. பத்து விக்கெட்டுகளால் முதல் போட்டியில் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி.

இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் ஹர் மிஷன் மேற்கிந்தியதீவுகள் அணியை தலை தூக்கவிடவில்லை. இரண்டு இனிங்சிலும் 6 விக்கெட்டுக்கள் என்றரீதியில் ஹர்மிஷன் பெற்றுக்கொண்டார். இதனால், முதல் இனிங்சில் 208 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் 209 ஓட்டங்களையும் மேற்கிந்தியத் தீவுகள் பெற்றுக்கொண்டது.

இங்கிலாந்து அணி முதல் இனிங்சில் 319 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் 99 ஓட்டங்களை, மூன்று விக்கெட்டுகளை இழந்து பெற்று, ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நோக்கில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, மூன்றாவது டெஸ்ட்டில் 224 ஓட்டங்களில் மேற்கிந்தி யத்தீவை முதல் இனிங்சில் ஆட்டம் இழக்கச் செய்தது. பிளின்ரோவ் 5 விக்கெட்டுகளைச் சரித்தார். ஹர்மிஷின் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இங்கிலாந்து அணியும் தனது முதல் இனிங்சில் 226 ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டது. ஆனால், இரண்டாவது இனிங்சில் 94 ஓட்டங்களுக்குள் மேற்கிந்தியாவை சுருட்டியது.

93 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், இரண்டு விக்கெட்டுக்களை இழந்து தனது வெற்றியை உறுதிசெய்தது இங்கிலாந்து அணி. மேற்கிந்தியதீவுகள் அணியின் மூன்று விக்கெட்டுகளைத் தொடர்ச்சியாகக் கைப்பற்றி ஹட்ரிக் சாதனையை ஏற்படுத்தினார். பிளின் ரோவ், சர்வான், சந்திரபோல, ஹிண்ட்ஸ் ஆகி யோரின் விக்கெட்டுகள் இவரால் சரிக்கப்பட்டன.

மேற்கிந்தியதீவுகள் அணி இரண்டுமுறை விட்ட தவறையே திரும்பவும் செய்தது அல் லது பட்டகாலிலேயே பட்டது. ஒரு போட்டியில் 47 ஓட்டங்களுக்குள்ளும் இன்னொருபோட்டி யல் 94 ஓட்டங்களுக்குள்ளும் தனது இனிஙசை இழந்தமை கிரிக்கெட்டின் முடிசூடா மன்னர் கள் - தமது ஆட்சியிலிருந்து கிரிக்கெட்டை விடுவித்த நிகழ்வைக் குறிக்கின்றதாக அமைந் தது. நாலாவது டெஸ்ட்டில் வெற்றிபெற்று, தமது கௌரவத்தை நிலைநிறுத்த வேண்டிய தேவை யில் மேற்கிந்திய அணியின் நிலைமையிருந்தது.

நாலாவது டெஸ்ட்டில் மேற்கிந்திய அணி யின் தலைவர் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றார். தனது அணி துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார்.

பத்து ஓட்டங்களைப் பெற்றநிலையில், கங்கா ஆட்டமிழந்தைத் தொடர்ந்து களமிறங் கினா., பிறைன் லாரா, கைல் உடன் இணைந்து சிறப்பாக விளையாடிக்கொண்டிருந்தார். கைல் 69 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பின்னர் சர்வான் 90 ஓட்டங்களைப் பெற்



சர்வான் — லாரா
"என்னதான் வேதனை"

றும், பவல் 23 ஓட்டங்களுடனும், ஹிண்ட்ஸ் 36 ஓட்டங்களைப் பெற்றும் ஆட்டமிழந்தனர். அணித்தலைவர் லாரா 400 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். மறுகரை யில் ஜேக்கப்ஸ் இவருக்குத் துணையாக 107 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். மேற்கிந்தியதீவுகள் அணி 751 ஓட்டங்களை ஐந்து விக்கெட்டுகளை இழந்து பெற்றநிலையில், தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. லாரா இந்தப் போட்டியில் புதியதொரு உலக சாதனையை ஏற்படுத் தினார். மேற்கிந்தியதீவுகள் 47 ஓட்டங்க ளுக்குள் சுருண்டும் போய்விடும். 751 ஓட் டம்வரை விஸ்வரூபம் எடுக்கவும் செய்யும் என்பதை நிரூபித்தார் லாரா. இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்சில் 285 ஓட் டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் பிளின்ரொவ் ஆட்டமிழக் காமல் 102 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது இனிங்சை தொடர்ந்து விளையாட நிர்ப்பந்திக்கப்பட்ட இங்கி லாந்து, தனது இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்தது. 4 ஆவது போட்டியில் தோல் வியைத் தவிர்ப்பதற்காக விளையாடி சம நிலைப்படுத்தியது இங்கிலாந்து அணி.

தனது இரண்டாவது இனிங்சில் 5 விக்கெட்டுகளை இழந்து, 422 ஓட்டங்க ளைப் பெற்றநிலையில் ஐந்தாம் நாள் ஆட்டம் நிறைவடைந்தது. அணித்தலை வா வோகான் 140 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும், நாலாவது போட்டியில் தோல வியைத் தவிர்த்துக்கொள்ளவே மேற்கிந் தியாவால் முடிந்தது. மூன்று போட்டிகளில் தோல்வியடைந்த அந்த அணி, 4 ஆவது போட்டியில் வெற்றிபெற்று ஒரு கௌரவ மானநிலையைப் பெறலாம் என நினைத் தது. அது கைகூடவில்லை. ஆயினும், கிரிக்கெட் உலகில் மேற்கிந்தியத்தீவுகள் அணியைப் பேசவைக்கும் போட்டியாக நாலா வது போட்டி அமைந்தது.

- வெண்மதி -

# அவனுக்கு நிகர் அவனே

இர்பான் பத்தான் மற்றும் பார்த்திவ் பட்டேல் இருவரும் இந்தியக் கிரிக்கெட் அணியின் இளம் நட்சத்திரங்கள். இவர்களில் பத்தான் மைதானத்தில் சிறிது கூடுதலாகவே தன் வேகத்தைக் காட்டமுயற்சிக்கிறார். அவரது மைதான நடத்தைக் கோலங்கள் சிறிது அருவருப்பாக இருப்பதை ரசிகர்கள் உணர்ந்திருப்பார்கள்.

இந்திய - பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் இது கூடுதலாகவே அவதானிக்கப்பட்டுள்ளது. **BOUNCERS** போடுவதன்மூலம், விக்கெட் எடுக்க முயற்சித்தமை தொடர்பில் நடுவர்களால் பலமுறை இவர் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார். விக்கெட்டை வீழ்த்திய பின் அதனைக் கொண்டாடுவது இயல்பே. ஆனால், இவர் வெறி கொண்டவர்போல நடந்து கொள்வதும் அவதானிக்கப் பட்டுள்ளது. ஆனால், பத்தொன்பது வயதும் நிறையாத பத்தான் டெஸ்ட் தரத்துக்கு ஈடு கொடுத்து ஆடுவதும், விக்கெட்டுக்கள் வீழ்த்துவதும், மிகத் திறமையாகப் பந்து வீசுவதும் - ஆச்சரியத்துக்கும், மிக வரவேற்புக்கும் உரியதாக இருக்கிறது. இன்னும் நிறையக் கற்றுக்கொண்டு நீண்ட காலம் டெஸ்ட் உலகில் அவர் இருக்க வேண்டும். அதற்கான முழுப்பொறுப்பும் அவரிடமே இருக்கின்றது.



சச்சின் டெண்டுல்கர்—
"தன்னை உணர்ந்தவன்"

இன்னொருபுறம் பார்த்தால், இவர் 19 வயதேயானவர், ஆனால் அணியின் மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகிப்பவர். விக்கெட்டுக்களின் பின்னால் நிற்கும் ஒவ்வொரு கணத்திலும் உணர்வோடு செயற்படுபவர். ரசிகர்களுக்கு அவரைப் பார்க்கும்போது இந்தக் குழந்தையா இவ்வளவு திறமைசாலி என்று மூக்கில் விரல்களை வைக்கத்தோன்றும். அதுமட்டுமல்ல, சிறந்த துடுப்பாட்ட வீரராக வளர்ந்து வருபவரும்கூட.

ஆனால், நடைபெற்று முடிந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அநாவசியமாக அதீதமாக நடுவர்களிடம் கேள்வி எழுப்பியதில், நடுவர்கள் வெறுத்துப்போயிருக்கிறார்கள். இதனை நடுவர்கள் சைமன் டபலும், ஸ்ரீவ் பக்னரும் உரியவர்களிடம் முறையிட, அது தொடர்பில் பார்த்திவ் குற்றத்தை ஒப்புக்கொள்ள, ஆட்ட வருமானத்தில் அறுபது வீதத்தை இழந்துபோய் நிற்கிறார் அவர். ஆட்ட மத்தியஸ்தர் ரஞ்ஜன் மடுகல்ல மிகவும் கண்டிப்பானவர். அவரிடம் பார்த்திப் மாட்டிக்கொண்டது துரதிர்ஷ்டமே.

எது எவ்வாறு இருந்தாலும் சச்சின் இவர்களைவிடக் குறைந்த வயதில் சர்வதேசக் கிரிக்கெட்டுக்குள் நுழைந்தவர். இன்றும் சாதனைகள் படைத்துக்கொண்டிருப்பவர். ஆனால், இதுவரையில் இவர் மற்றவர்களின் மனதை நோகப்பண்ணியதாகப் பதிவுகள் இருப்பதாகப் பெரிதாய்த் தெரியவில்லை. இவர் பற்றி ஒன்று முனைப்பாக இன்றும் பேசப்படுகிறது. ஏதோ ஒரு ஆட்டத்தில் தான்விட்ட சிறுதவறால் விக்கெட்டை இழந்து விட்டு, பவிலியன் திரும்பிய அவர், தன் தவறை நினைத்து அழத்தொடங்கிவிட்டாராம். பத்தான், பார்த்திவ் நீங்கள் மற்றவர்களையல்லவா அழவைக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**- நிர்மலன்.**

# பலிக்கடாவாக்கவேண்டாம்

இந்திய - பாகிஸ்தான் அணிக்களுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் - சௌரவ் கங்கூலி விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டதும், தொடர்ந்து வந்த வினா- அப்படியானால் சந்தர்ப்பத்தை இழக்கப்போகும் வீரர் யார் என்பதுதான். உடனடியாகவே பதிலும் வந்தது. அது ஆகாஷ் சோப்ராவாகத்தான் இருக்கும் என்று. அதனை அடுத்து வந்த வினா - அப்படியானால், வீரேந்தர் ஷேவாக்குடன் ஆரம்பத்துடுப்பாட்டவீரராக இணைந்து ஆட்டத்தை ஆரம்பிக்கப்போவது யார் என்பது - கங்கூலியா, யுவராஜ் சிங்கா, சச்சினா அல்லது விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் பட்டேலா என்பதுதான். இதில் குறைந்த வாய்ப்பு இருந்தது பார்த்திவ் பட்டேலுக்குத்தான். ஆனால், சௌரவ் கங்கூலி துணிந்த மனிதர்தான். அத்தோடு துணிவுக்குத் துணை நின்று ஷேவாக்குடன் ஜோடியாக இணைந்த பார்த்திவ் பட்டேலும் அசகாயசூரன்தான்.



பார்த்திவ் பட்டேல்
"குட்டிப்புயல்"

பார்த்திவ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரனாகக் களம் இறங்கியதும் ஒரு சலசலப்பு ஏற்பட்டது உண்மை. ஏனெனில் ,அவரது வயதும் அதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கலாம்.

மேலும் இரண்டொரு ஆட்டங்களில் பார்த்திவ் சிறப்பாகச் செய்யாவிட்டால், அவரது எதிர்காலம் ஆபத்துக்குள்ளாகும் என்ற அச்சமும், கரிசனையும்கூடக் காரணமாக இருக்கலாம். ஆனால், பார்த்திவ் பட்டேல் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் களம் இறங்கிய அடுத்த நிமிடம், அக்தரின் முதல் பந்துவீச்சில் ஷேவாக் ஆட்டமிழந்துபோக, அந்த அதிர்ச்சியை ஜீரணித்துக்கொண்டு தனது பங்காகத் தொடர்ந்து ஆடி, 69 ஓட்டங்கள் குவித்தது அற்புதம்தான்.

இவர் பற்றிக் கருத்துக்கூறும் 76 வயது நிரம்பிய பாகிஸ்தான் முன்னாள் தலைவரும், விக்கெட் கீப்பருமான இம்தியாஸ் அகமட் - இவர்மீது மிகுந்த நம்பிக்கை தெரிவிக்கிறார். பார்த்திவ் மிக இளம்வயதாக இருக்கிறார். இன்னும் கற்றுக்கொள்ளும் பருவத்திலேயே இருக்கிறார். எனவே, இவர் விடுகின்ற சிறுபிழைகளைப் பெரிதுபடுத்தக்கூடாது. அதற்கு மாறாக இவரது திறமையை வளர்த்துக்கொள்ளும் பாங்கில் உற்சாகம் கொடுக்கப்பட வேண்டும் என்கிறார். மேலும் சிறப்பாக அவர்கூறும் ஒரு கருத்தைக் குறிப்பிடலாம். தொடர்ச்சியாகக் குறை காண்பதைவிட்டு விடுங்கள் என்கிறார் அவர்.

இந்திய ரசிகர்கள், பத்திரிகைகள், கிரிக்கெட் பொறுத்துப் பொதுவாகப் பின்பற்றும் அணுகுமுறையை இவர் உணர்ந்தவர்போல் பேசுகிறார். உண்மையும் அதுதான். கவாஸ்கர் ஓய்வுபெற்றதன்பின், இதுவரை நாற்பதுக்கு மேற்பட்ட ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் வந்துபோய் இருக்கிறார்கள். தற்போதுள்ளவர்களுக்கு என்ன நேருமோ யார் கண்டது.

**- றோஜா.**

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

**01. SAF போட்டிகளில் 200 m ஓட்டத்தில் தங்கம் வென்ற இலங்கை வீராங்கனை யார்?**

**02. கிரிக்கெட் வரலாற்றில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையான 400 ஓட்டங்களைப் பெற்றவர் யார்?**

**03. SAF போட்டியில் ஜானி சத்துராங்கனி எந்த நிகழ்வில் தங்கம் பெற்றார்?**

**விளையாட்டுப் புதிர் - 07**

**விண்ணப்பப்படிவம்.**

**முழுப்பெயர்:- ..................................................**

**முகவரி:- ..................................................**

**01.**

**02.**

**03.**

**விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 23.04.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.**

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 07,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டுப் புதிர் இல. 06 இன் விடைகள்

1) இந்தியா
2) டடென்டா தைபு
3) பாகிஸ்தான்.

**பரிசு பெற்றவர்**
**சி.விமலாதேவி**
**606 /1 கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
**YONEX MULTI PALACE**
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

# தடைக்கற்கள் ஏணிப்படிகள்

பலமிழந்த நிலையிலுள்ள டெஸ்ட் கிரிக்கெட் அணிகளுக்கு உதாரணமாகக் காணப்படுவனவற்றுள் சிம்பாப்வேயும் ஒன்று. சிம்பாப்வேயின் அரசியல் கிரிக்கெட்டை நிரம்பப் பாதிக்கிறது போலத்தெரிகிறது. உலகக் கிண்ணப் போட்டிகளின்போது, அன்டி பிளவர், ஒலங்கா போன்றவர்கள் தம் அதிருப்தியை வெளிப்படையாகவே காட்டினார்கள். ஆனால், அணித்தலைவர் ஹீத் ஸ்ரீக் பல பாதிப்புக்களைக் கண்டிருந்தாலும், தன் மனதைத்தளரவிடாமல் அணியைக் கட்டியெழுப்பப் பகீரதப் பிரயத்தனம் செய்தார். ஆனாலும் தொடர்ந்து தோல்விகள். மேலும் சிம்பாப்வே அரசும சிம்பாப்வே அணித்தலைவர் எதிர்பார்த்த ஆதரவை இன்றுவரை கொடுக்கவில்லைபோலத் தெரிகிறது. இதன் விளைவு அணித்தலைமையில் இருந்து விலகிக்கொள்வதாக அவர் அறிவித்துவிட்டார். ஏதோ ஒரு சாபம் ஹீத் ஸ்ரீக் சிம்பாப்வேயில் பிறந்துவிட்டார். உலகின் அதிசிறந்த எந்தவொரு அணியிலும் நிபந்தனையற்ற அங்கத்துவம் பெறும் தகுதிகொண்டவர் இவர். அது டெஸ்ட் போட்டிகளாக இருந்தால் என்ன, ஒரு நாள் போட்டிகளாக இருந்தால் என்ன ஹீத் ஸ்ரீக்கின் நிலை உண்மையில் மிகவும் பரிதாபகரமானது.



தைபூ
"குருவி தலையில்..."

மறுபுறம் மிக இளமையில் இருபது வயதில் சிம்பாப்வேயின் அணித்தலைவராக டடான்டே தைபு பதவி ஏற்றுள்ளார். எந்த வகையிலும் தைபு - சிம்பாப்வே அணியைக் கட்டியெழுப்புவார் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. ஏனெனில், சிம்பாப்வே அரசியல் சிம்பாப்பே கிரிக்கெட்டின் அடிக்கட்டுமானத்தையே அசைத்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க, இலங்கை அணி சிம்பாப்வே செல்கிறது. அணியின் புதிய தலைவர் மாவன் அத்தபத்து. இது எல்லோரும் எதிர்பார்த்ததுதான். ஆனால், அணியின் உபதலைவர் யார் என்று தீர்மானிக்க முடியாதநிலையில், இலங்கைக் கிரிக்கெட் சபை திணறுகிறது. ஒருசாரர் மஹேல ஜயவர்த்தன இப்பதவிக்கு நியமிக்கப்படுவார் என்று ஜோஷ்யம் கூறுகிறார்கள். மறுபுறம் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் ஏன் உபதலைவர் ஆகக்கூடாது என்று இன்னொருசாரார் குரல் எழுப்புகிறார்கள். இரண்டு கோரிக்கைகளும் நியாயமானவையே . இருந்தாலும், இலங்கைக் கிரிக்கெட் சபை இலங்கை அணிக்கு ஒரு உபதலைவரை தனது அதிகாரங்கள் வரையறைகளுக்கு உட்பட்டு நியமித்திருக்கவேண்டும். அப்படி நியமிக்க முடியாமல் திணறுவது - இலங்கைக் கிரிக்கெட் சபையில் ஏதோ குறைபாடு இருப்பதான ஒரு உணர்வைத்தான் தோற்றுவிக்கும். இத்தோடு, தொடர்புடையதாக இயன்டானியல், ரஸல் ஆர்னோல்ட் இருவரும் அணிக்குள் உள்வாங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

எது எவ்வாறாயினும், இலங்கை அணி ஒரு பலமான அணியாகத்தான் சிம்பாப்வே செல்லப்போகிறது என்பதில் சந்தேகம் இல்லை. அத்தோடு, அவுஸ்ரேலியத் தொடர் தோல்வியினைச் சமாளிக்கவும் வேண்டும். ஆனால், சிம்பாப்வே இலங்கை அணிக்கு ஈடுகொடுத்து ஆடும் என்று நம்ப இயலாது. இலங்கை - ஆபிரிக்கச் சிங்கங்களுக்கு ஒரு சவாலாகத்தான் இருக்கப்போகிறது.

**- கிருஷ்ணா -**

# 'தாரண' புத்தாண்டு உங்களுக்கு எப்படி?

தமிழ் வருடங்கள் மொத்தம் 60. சித்திரை முதல் பங்குனிவரை ஒரு ஆண்டாகக் கணக்கிடப்படுகிறது. சித்திரை மாதம் சூரியன் மேடராசியில் நுழையும் நாளே சித்திரை விஷு என்னும் தமிழ்ப் புத்தாண்டு தினம். 12 ராசிகளிலும் வலம் வரும் சூரியன் தங்கியிருக்கும் காலம் தான் ஒரு மாதம். தற்போது சுபானு ஆண்டு முடிந்து, தாரண ஆண்டு 13.04.2004 பிறந்துள்ளது. தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று சூரியன் பூமியின் அருகில் இருக்கும். இது ஒரு புனிதமான நாள். இந்தத் தாரண ஆண்டின் குரு பெயர்ச்சியும், ராகு, கேது பெயர்ச்சியும் நிகழ்ந்துள்ளது. ஆண்டின் தொடக்கத்தில் கிரகங்களின் ஒன்றான குரு பகவான் சிம்மராசியில் இருக்கின்றான். அவர் 15.08.2004 அன்று கன்னிராசிக்குச் செல்கின்றார்.

அடுத்து ராகு - கேது இடப்பெயர்ச்சி 5.02.2005 அன்று நிகழ்கின்றது. தற்போது மேடராசியில் இருக்கும் ராகு, அன்றைய தினம் மீனராசிக்கு மாறுகின்றார். அந்தச் சமயம் கேது துலாம் ராசியிலிருந்து கன்னி ராசிக்கு இடம்பெயர்கின்றார். இன்னொரு அதிமுக்கிய கிரகமான சனி ஆண்டு முழுவதும் மிதுனராசியில் தான் பிரவேசிக்கின்றார். இந்த முக்கிய கிரகங்களின் இருப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் புத்தாண்டுப் பலன் கணிக்கப்பட்டுள்ளது. குருவின் பார்வைக்கு அதிக சக்தி உண்டு. சில ராசியினருக்கு இந்த நான்கு முக்கிய கிரகங்களும் சிறப்பான இடத்தில் இல்லாமற்போகலாம். அவர்கள் கவலைப்படவேண்டாம். விரைவாகச் சுழலும் சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நற்பலனைக் கொடுக்கும்.

தமிழ்நாட்டிலிருந்து பிரபல ஜோதிடர்
பண்டித காழியூர் நாராயணன்

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)



கொண்ட குறிக்கோளில் கண்ணும் கருத்துமாக இருக்கும் தனுராசி அன்பர்களே! நீங்கள் எடுத்த காரியத்தை முடிப்பதில் வல்லவர்கள். உங்கள் ஆட்சி நாயகன் குருவும், நட்பு கிரகமான கேதுவும் சாதகமாக அமைந்திருக்கும் சூழ்நிலையில் இந்த புத்தாண்டு பிறக்கிறது.

அவர்கள் பல்வேறு நன்மைகளை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்களால் ஆண்டு முழுவதும் நன்மை தரமுடியாது. பெரிய கிரகங்களில் ஒன்றான சனி பகவான் தற்போது ஏழாம் இடத்தில் இருக்கிறார். இதனால், சிற்சில பிற்போக்கான நிகழ்வுகளை அவர் கொடுக்கலாம்.

முயற்சிகளில் தடைகளை உருவாக்கலாம். தீயோர் சேர்க்கைக்கு ஆளாகலாம். ஐந்திலிருக்கும் ராகுவும் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளை உண்டு பண்ணுவர் என்பது பொதுவிதி. ஆனால், ராகு ஐந்தாம் இடத்தில் இருக்கும் போது அவருக்கு தேவதையாக கேது இருக்கிறார்.

இதனால், இராகுவால் கெடுபலனை கொடுக்கமுடியாது. வருகிற ஆகஸ்ட் 15 ஆம் திகதி குரு பெயர்ச்சி நடக்கிறது. அப்போது குரு 10 ஆம் இடத்திற்குச் செல்கிறார். இது சுமாரான நிலை. அதன்பின் குருவால் நன்மைதர முடியாது. அவர் பொருள் நஷ்டத்தை கொடுக்கலாம்.

ஆனால், ஆகஸ்ட்டுக்குப் பிறகு குருவின் ஐந்தாம் இடத்துப் பார்வை உங்களுக்கு சாதகமாக அமையும். அதன்மூலம் உங்களுக்கு வரும் இடையூறுகளை முறியடித்து முன்னேற்றம் அடையலாம்.

தற்போது ராகு ஐந்தாம் இடத்தில் இருக்கிறார். அவர் குடும்பத்தில் சிற்சில பிரச்சினையை உருவாக்குவார். கேது தற்போது 11 ஆம் இடத்திலிருந்து பல்வேறு நன்மை தருகிறார்.

வருகிற 5.02.2005 அன்று ராகு-கேது பெயர்ச்சி நடக்கிறது. அப்போது ராகு நாலாம் இடத்திற்கும் கேது பத்தாம் இடத்திற்கும் மாறுவார்கள். இந்தப் பெயர்ச்சிக்குப் பின்னர் கேதுவால் நன்மை தரமுடியாது. ராகு செல்லும் இடமும் சாதகமற்ற இடம் தான். மேற்கண்ட நிலையைக் கொண்டு பார்த்தால் ஆண்டின் தொடக்கம் சிறப்பானதாக இருக்கும். பிற்பகுதி குருவின் பார்வையால் சீரான பலனையும் பெறலாம்.

**ஏப்ரல் 13 முதல் ஓகஸ்ட் 15 வரை**

சிறப்பான காலம் நினைத்த காரியத்தை செயற்படுத்தி முன்னேற்றம் காணலாம். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். வீட்டுக்கு தேவையான சகல வசதிகளும் கிடைக்கும். மதிப்பு, மரியாதை கூடும். புதிய சொத்து மற்றும் வீடு வாங்கலாம் அல்லது சிலர் வசதியான வீட்டுக்குப் குடிபுகலாம். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். திருமணமாகாதவருக்கு நல்ல வரன்கள் அமையும்.

கணவன் - மனைவியிடையே அன்பு அதிகரிக்கும். மனைவி வகையில் சிற்சில பிரச்சினை வந்தாலும், அது உடனே சரியாகிவிடும். விருந்து விழா என சென்று வரலாம். உத்தியோகம் பார்த்தவர்களின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வு சம்பள உயர்வு வந்து சேரும். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புண்டு. கோரிக்கைகள் நிறைவேறும் விரும்பிய இடத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரம் சிறப்பாக நடக்கும். இலாபம் அதிகரிக்கும். வேலையின்றி இருப்பவர்கள் ஆண்டின் தொடக்கத்திலேயே தொழிலைத் தொடங்கலாம். கலைஞர்கள் எண்ணற்ற பல முன்னேற்றங்களைக் காணலாம். புகழ் பாராட்டு வந்துசேரும்.

மாணவர்கள் இந்தக் கல்வி ஆண்டில் வெற்றி உறுதி என்றே கொள்ளலாம். நல்ல மதிப்பெண் கிடைக்கும். சிரத்தை எடுத்துப் படிக்க வேண்டியிருக்கும். விவசாயிகள் சிறப்பான பலனைக் காண்பர். புதிய நிலம் வாங்கலாம். பெண்கள் சிறப்பாகக் காணப்படுவர். புத்தாடை அணிகலன்கள் வாங்கலாம். உடல் நலம் திருப்திகரமாக இருக்கும்.

**ஓகஸ்ட் 16 முதல் மார்ச் வரை**

எதையும் அதிக முயற்சி எடுத்து செய்யவேண்டி இருக்கும். ஆனாலும், பணப்புழக்கம் சிறப்பாகவே இருக்கும். ஆனால், எந்தப் பிரச்சினையும் எளிதாக முறியடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும். வசதிகள் கிடைக்கும் சுப நிகழ்ச்சிகள் சற்று முயற்சியின் பேரில் நடக்கும். வீண் செலவுகளை குறைப்பது நல்லது. உத்தியோகம் பார்ப்பவர்கள் அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும். வேலையில் பிற்போக்கான நிலை ஏற்படலாம். நிதானமும் தேவை.

சிலருக்கு வேலையின்மீது வெறுப்பு வரலாம். அதற்காக வேலையைவிடும் முடிவுக்கு வந்துவிட வேண்டாம். சற்று பொறுமையைக் கடைப்பிடியுங்கள். உங்கள் முயற்சியும் அனுசரணையும் உங்களுக்குத் தக்க சமயத்தில் கை கொடுக்கும். வியாபாரிகள் சீரான நிலையில் இருப்பார்.

பெப்ரவரியில் இருந்து பண விசயத்தில் சற்றுக் கவனமாக இருக்கவும். எதிலும் அதிக முதலீடு செய்யவேண்டாம். சிலர் தீயோர் சேர்க்கைக்கு ஆளாகி பணத்தை விரயமாக்கலாம். எனவே யாரிடமும் பார்த்துப் பழகவும். எது எப்படி ஆனாலும், குருவின் பார்வை பலமாக இருப்பதால் பின்தங்கிய நிலை ஒருபோதும் உருவாகாது.

கலைஞர்கள் சிரத்தை எடுத்தால் தான் புதிய ஒப்பந்தங்களை பெறுவார். உங்களுக்கு வரவேண்டிய பாராட்டு விருது போன்றவை தட்டிப் பறிக்கப்படலாம். மாணவர்கள் சிரத்தை எடுத்துப் படிக்கவேண்டியிருக்கும். உடல்நலம் சுமாராக இருக்கும். பித்தம், மயக்கம் போன்ற உபாதைகள் வரலாம்.

## மகரம்

(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)



சனியை ஆட்சிக் கிரகமாகக் கொண்ட மகரராசி அன்பர்களே! தகுதியானவர்களோடு மட்டும் பழகும் தன்மை கொண்டவர்கள். இந்த ஆண்டு சிறப்பான வாழ்க்கைத் தரம் உயர்ந்த வண்ணம் இருக்கும்.

ராசி நாயகன் சனி. உங்களுக்கு சளைக்காமல் உதவி செய்துவருகிறார். அவரின் ஆதரவு இந்த ஆண்டு முழுவதும் இருக்கும். அவரால் பல்வேறு காரியங்களை நீங்கள் வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். உங்கள் ஆற்றல் மேம்படும். பொருளாதார வளம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கும்.

குருபகவான் தற்போது எட்டாம் இடத்தில் இருந்து பணவிரயத்தைத் தந்துகொண்டிருப்பார். ஆனாலும், அவரது ஏழாம் இடத்துப் பார்வை உங்களுக்கு சாதகமாக இருப்பதால் எந்தப் பிரச்சினையையும் முறியடிக்கலாம். தற்போது குருபகவான் திருப்தியற்ற நிலையில் இருந்தாலும் வருகிற ஆகஸ்ட் 15 ஆம் திகதி இடம்மாறி 9 ஆம் வீட்டிற்குச் செல்கிறார். இது மிகவும் சிறப்பான நிலை. குடும்பநிலை மேம்படும். இராகு தற்போது நாலாம் இடத்தில் இருந்து சிற்சில பிரச்சினைகளை உருவாக்குவார்.

அந்த இராகு 5.2.2005 அன்று இடம் பெயர்ந்து மூன்றாம் இடத்திற்கு வருகிறார். இது சிறப்பான நிலை. அவர் பல்வேறு நன்மைகளைத் தரக் காத்திருக்கிறார். கேது பத்தாம் இடத்தில் இருந்து பெப்ரவரி 5 ஆம் திகதி ஒன்பதாம் வீட்டிற்குப் போகிறார். அவர் இருக்கும் இடமும் போகப் போகும் இடமும் சிறப்பானதல்ல.

ஆனால், சனி, குரு, ராகு ஆகிய கிரகங்களின் அனுகூலமான போக்கால் சிறப்பு அம்சங்கள் பல பெறலாம். அந்த வகையில் காலவாரியான பலன்களைக் காணலாம்.

**ஏப்ரல் 13 முதல் ஓகஸ்ட் 15 வரை**

எல்லாமே பெற்று நல்லாவே வாழலாம். எதையும் வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். செல்வாக்கு சிறப்பாக இருக்கும். பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். அநாவசிய செலவுகள் வரலாம். சிக்கனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்சிக்கு குறை இருக்காது. ஆடம்பரப் பொருட்கள் வாங்கலாம்.

கணவன் - மனைவியிடையே அன்பு நீடிக்கும். சில தம்பதியினரிடையே ஊடல் வரலாம். ஆனால் அது அடுத்த கணமே மறைந்துவிடும். தீவிரமுயற்சியின் பேரில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சி நடக்கும். சிலரது மனத்தில் இனம் புரியாத மனக் குழப்பம் இருக்கும்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் சீரான நிலையில் இருப்பார். அதிக வேலைப் பழுவை சுமக்கவேண்டியிருக்கும். மேலதிகாரிகளிடம் அனுசரணையுடன் நடந்து கொள்ளவும். சிரத்தை எடுத்தால் கோரிக்கைகள் நிறைவேறும். இடமாற்றம் காரணமாக ஊர்விட்டு ஊர்செல்லும் நிலை ஏற்படலாம்.

வியாபாரிகள் நல்ல முன்னேற்றம் காணலாம். புதிய வியாபாரம் கைகொடுக்கும். இலாபம் அதிகரிக்கும். இரும்பு எந்திரம் மற்றும் தரகு போன்ற தொழில் சிறப்படையும். ஆனால், பகையாளிகள் வகையில் ஒரு கண் இருப்பது நல்லது. வீண் விரயமும் வரலாம்.

எனவே, யாரை நம்பியும் பணத்தைக் கொடுக்க வேண்டாம். சிலர் தொழிலை வேறு இடத்திற்கு மாற்ற வாய்ப்பு இருக்கிறது. கலைஞர்கள் நல்ல பணவரவை காண்பர். ஆனால், புகழ் பாராட்டுப் போன்றவை எதிர்பார்த்தபடி இருக்காது. மாணவர்கள் இந்தக் கல்வி ஆண்டில் சிரத்தை எடுத்துப் படிக்க வேண்டியிருக்கும்.

குருவின் பார்வையால் முயற்சிக்கு ஏற்ற பலன்கள் கிடைக்காமல் போகாது. வழக்கு விவகாரங்கள் ஆண்டு முழுவதும் சிறப்பாக இருக்கும். பெண்கள் மகிழ்ச்சி பொங்க காணப்படுவர். உடல் நலம் சுமாராக இருக்கும். தோல் தொடர்பான உபாதைகள் வரலாம். பயணத்தின்போது சற்றுக் கவனம் தேவை.

**ஓகஸ்ட் 16 முதல் மார்ச் வரை**

குரு சாதகமான இடத்திற்கு வருவதால் நன்மைகள் மேலும் அதிகரிக்கும். பணவரவு கூடும். பணவிரயம் இருக்காது. இதனால், சேமிப்புப் பெருகும். செல்வாக்கு மேம்படும். புதிய வீடு வாங்கலாம். வாகன சுகம் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உத்தியோகம் பார்ப்பவர்கள் பின்தங்கிய நிலையில் இருந்து விடுபட்டு முன்னேற்றம் காண்பர்.

சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்றவை கிடைக்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவும் இருக்கும். விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கப் பெறலாம். சக ஊழியர்கள் ஒத்துழைப்புடன் இருப்பர். பணியில் தனி முத்திரை பதிக்கலாம். வியாபாரிகள் சகல விதத்திலும் முன்னேற்றம் காணலாம்.

பெப்ரவரியில் இருந்து மேலும் இலாபம் கூடும். இந்தப் பொன்னான காலத்தைப் பயன்படுத்தி சுயதொழிலில் ஈடுபடலாம். எதிரிகளின் இடையூறு இருக்கும். இடம் தெரியாமல் மறையும். கலைஞர்கள் வளர்ச்சி அடைவர். புதிய ஒப்பந்தங்கள் தானாக வரும். விரோதிகளால் தட்டிப் பறிக்கப்பட்ட விருது, பாராட்டு கிடைக்கப்பெறலாம்.

சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று வருவீர்கள். பொதுநல ஊழியர்கள் எதிர்பார்த்த பலனைப் பெற்று திருப்தியடைவர். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். மதிப்பெண்கள் அதிகம் கிடைக்கும். பலரது வெற்றிக்கு உத்தரவாதம் தரலாம். விவசாயம் சிறப்படையும். புதிய சொத்து வாங்கும் எண்ணம் கைகூடும். உடல் நலம் மேம்படும். மன உலைச்சலால் அவதிப்பட்டு வந்தவர்கள் நிம்மதியடைவர்.

---

கருத்துப் பகிர்வுகள்

காவலூர் விஜேந்திரன்

# தங்கி வாழும் தன்மையை நீக்கும் வகையில் சுயதொழில் முயற்சி பயிற்சிகளை பெறுவோம்





வேலையற்றிருக்கும் யுவதிகளின் தற்கால, எதிர்கால நோக்கம் கருதி அவர்கள் ஒவ்வொருவரும் சுயமுயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் அழகியல் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. சமூக சேவைத் திணைக்களமும், கிராம அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக தையல், மனையியல் டிப்ளோமா ஒருவருட பயிற்சியினை நடாத்தி வருகின்றனர். பிரதேச செயலகங்களிலுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளின் ஊடாக மாணவர்களை தெரிவு செய்து வருமானத்துடன்கூடிய பயிற்சி நெறியினை செயற்படுத்திவருகின்றனர்.

பெண்கள் தாம் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்வதுடன் பிறரது தேவைகளையும் நிறைவு செய்து சமூகத்தில் முன்மாதிரியாக, தங்கி வாழும் தன்மையின்றி, சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் முகமாக நடைமுறைப் படுத்திவரும் இப்பயிற்சிநெறியானது மிகமிக முக்கியமானது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் எஸ். யோகானந்த ராஜா இப்பயிற்சிநெறி தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

சண்டிலிப்பாய் பிரதேசத்திலுள்ள 28 கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியே விண்ணப்பம் கோருவோம். ஒருவருட தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சிநெறி ஊக்குவிப்புப் பணத்துடன் வழங்கப்படும். பயிற்சி முடிவில் கண்காட்சி வைத்தே அவர்களிற்கான சான்றிதழ்கள் வழங்குவோம். இக்கண்காட்சியின் மூலம் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கமாகவும், மேற்கொண்ட பயிற்சியின் முக்கியத்துவத்தை மற்றவர்களிற்கு உணர்த்துவதற்காகவும் இரண்டு நாள் தொடர்ந்து கண்காட்சி இடம்பெறுவதுடன் பொருட்களின் விற்பனையும் இடம்பெறுகின்றமை சிறப்பான ஒரு செயற்பாடாகும். இதன்மூலம் பொது மக்கள் இவர்களது உற்பத்திப் பொருட்களை பார்வையிட்டு அதன் ஊடாக அவர்களின் திறமைகளை மதிப்பிடுவதற்கு வசதியான களமாக அமைகிறது. வருமானத்தை ஈட்டக்கூடிய சுயதொழிலை மேற்கொள்வதற்கான தகுதியினையும், அனுபவத்தையும் ஆளுமையையும் ஒவ்வொரு பயிற்சியாளரும் பெறுகின்றார். பெரும்பாலும் இப்பயிற்சி நெறியானது கிராமமட்ட பெண்களுக்கே மிகமிக அவசியமானது. ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் இப்பயிற்சி நெறியில் ஆர்வமுள்ளவர்கள் பங்குகொண்டு தம்மையும் வளர்க்கலாம். அதேநேரம் தமக்கான ஒரு தொழிலையும் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் அண்மையில் 36 யுவதிகளிற்கு ஒரு வருட தையல், மனையியல் பயிற்சி நெறி நடாத்தி முடிக்கப்பட்டது. இப்பயிற்சிநெறி முடிவில் இருநாள் கண்காட்சி வடலியடைப்பு இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. வடலியடைப்பு கிராமத்தைச் சேர்ந்த இந்த யுவதிகளிற்கு ஒரு மாதம் ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு பணமாக வழங்கி பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தை சேர்ந்த திருமதி சுனேந்திரா - சுதாகர் இப்பயிற்சி நெறி தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்:

தையல் - மனையியல் டிப்ளோமா பயிற்சிநெறிக்கு ஆரம்பத்தில் 45 பேர் வந்தனர். இவர்களில் 36 பேரே பயிற்சிமுடித்து சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். இந்த 36 பேரிலும் 30 பேரிற்கு நாளாந்த ஊக்குவிப்பு பணமான 50 ரூபா வழங்கப்பட்டது. ஏனைய 6 பேரும் தமது செலவிலேயே இப்பயிற்சியினை நிறைவு செய்தனர்.

இவ் ஒரு வருட பயிற்சியான தையல், ஐசிங், பூவேலை, கைவினைப் பொருட்கள் பூல் நூல் பயிற்சி, வீட்டுத் தோட்டம், குழந்தை பராமரிப்பு, குடும்ப சுகாதாரம், தலைமைத்துவ ஆளுமை என வெவ்வேறு துறை சார்ந்தவர்களால் இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியைப் பெற்றவர்கள் முழுமையாக தனித்து செயற்படக்கூடிய பக்குவத்தை பெறுவதுடன் பொறுப்பாக செயலாற்றக் கூடியவர்களாகவும் வெறியேறுவர் என்பது அனுபவ ரீதியான உண்மை. தையல் போதனாசிரியரான திருமதி வேல்வரதராணி - நல்லகுமார் இப்பயிற்சிநெறி தொடர்பாக கருத்துக் கூறுகையில்:

மகளிர் தினம் கொண்டாடப் படுவது மகளிரின் அபிலாஷைகள், திறமையான செயற்பாடுகள் என அவர்கள் தாம், தம் வழியில் செயற்படுவதை நினைவு கூருவதற்காகவே படித்துவிட்டு வேலையற்று இருக்கும் யுவதிகளுக்கு எந்த வகையில் முன்னேற்றப் பாதையைக் காட்டலாம் என்ற நோக்கத்தில்தான் இந்த பயிற்சியினை நடாத்தி வருகின்றோம். அவர்கள் எதிர்காலத்தில் வாழ்க்கையில் எந்த வகையில் முன்னேறவேண்டும் என்ற சந்தர்ப்பத்தில் நாம் இந்த வழிகாட்டல் பயிற்சியை வழங்கி வருகின்றோம்.

ஒரு குடும்பப் பெண்ணாக எதிர்காலத்தில் மிக சுமுகமாக தமது குடும்பத்தை வழிநடத்தக்கூடிய மனோ நிலையை இப்பயிற்சியைப் பெற்ற மாணவர்கள் பெற்றுள்ளார்கள். மொத்தத்தில் இந்த ஒரு வருட பயிற்சியின் ஊடாக ஒரு குடும்பப் பெண்ணை உருவாக்கியுள்ளோம் என்றால் அது மிகையாகாது. இவர்கள் இப்பயிற்சிகளை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் தமது குடும்பத் தேவைக்குரிய பொருட்களை செய்வதுடன், சிறிதளவு வருமானத்தையும் ஈட்டமுடியும். தமது தேவைகளைத் தாமே நிறைவு செய்யக் கூடியவர்களாக இப்பயிற்சி பெற்றவர்கள் மாறியுள்ளனர்.

இப்பயிற்சி நெறியினை மேற்கொண்ட 36 மாணவர்களில் செல்வி கல்யாணி, செல்வி சுபாஜினி ஆகியோர் தமது கருத்துக்களையும் தாம் பெற்ற பயனையும் இங்கு குறிப்பிடுகின்றனர். எதிர்காலத்தில் சுயமாக வாழவும், குடும்பத்தை திட்மிட்டு வழி நடத்தவும், சொந்த தொழில் முயற்சியை மேற்கொள்ளவும் எங்களால் முடியும். வீட்டிற்கு தேவையான பொருட்களை நாங்களே செய்யக்கூடியளவிற்கு பயிற்சி பெற்றுள்ளோம். எமது தேவைகளுக்கு உறவினர்களின் உதவிகளை நாடி இருந்த நாம் இனி வருங்காலங்களில் எமது தேவை

(10 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்துஆற்றும் பண்பே தலை
திருக்குறள்

# நமது நோக்கு

## இலங்கையின் இன விவகாரமும் இந்திய அரசும், ஊடகங்களும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்களில் அயல் நாடான இந்தியா கடந்த காலங்களில் காட்டிவந்த கரிசனைக்கான உள்நோக்கம் குறித்து ஈழத்தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் இன உணர்வு மிக்க தமிழர் சமூகம் அனைத்தும் மிகத் தெளிவான கருத்து நிலைப்பாட்டை 1980 களின் இறுதிப் பகுதியில் இந்திய அரசு வெறுமனே தனது பிராந்திய புவிசார் அரசியல் மற்றும் இராணுவ நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு தொலைநோக்கு சிந்தனைகளற்ற முறையிலான அணுகுமுறைகளை மேற்கொண்டதையடுத்து உறுதியாகக் கொண்டவர்களாகவே உள்ளனர்.

இந்திய - இலங்கை உடன்பாடு தமிழ் மக்களை எத்தகைய ஆபத்துகளுக்கு முகங்கொடுக்க வைத்தது என்பதை விபரிக்க வேண்டிய தேவையே கிடையாது. இருபதாம் நூற்றாண்டின் மிக மோசமான நம்பிக்கைத் துரோக நடவடிக்கைகளில் ஒன்றாகவே அந்த ஒப்பந்தத்தைக் கருதவேண்டும்.

சிங்கள பேரினவாத அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளிருந்து அதனைப் பாதுகாக்கும் அதேவேளை, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது சுயநல அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ள முயன்ற இந்திய அரசின் தவறான மதிப்பீடுகள் அந்த ஒப்பந்தத்தை ஒரு வரலாற்றுத் தவறாகவே மேற்கொள்ள வைத்தது.

அந்தத் தவறின் காரணமாக ஏற்பட்ட எதிர்விளைவும், காலத்துயரும் இந்தியாவையும், ஈழத்தமிழரையும் மட்டுமே பாதித்ததுடன் அதன் எதிரொலிகள் இன்றும் தொடரவே செய்கின்றன. இதன் காரணமாக அநுகூலங்களைப் பெற்றுக்கொண்டது இலங்கையின் பௌத்த சிங்கள பேரினவாத அரசுகள் மட்டுமேயாகும்.

அந்தக் கொடிய நிகழ்வை இந்திய அரசுமேற்கொண்டு ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாகியும் கூட, இன்னமும் அது தமிழினத்திற்கு இழைத்த துரோகத்தனமான தவறு குறித்து சுயவிமர்சனம் செய்து கருத்து நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ள வரட்டுக்கௌரவம் பார்ப்பது தான் கவலைக்குரிய விடயம்.

தற்போது புதிய அரசை தன் ஆளுமைக் கட்டுப்பாட்டின் கீழ் மறைமுகமாக இயக்கத்தொடங்கியுள்ள இந்தியா, இலங்கை இனப்பிரச்சினைகளுக்கான கடந்த அரசால் முன்னெடுக்கப்பட்ட நோர்வே நாட்டின் அனுசரணையுடனும், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனுமான பேச்சுவார்த்தைகளின் போக்கில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலான ஊடுருவலகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளதை அண்மைக்கால அதன் செயற்பாடுகள் உணர்த்திவருகின்றன.

புதிய அரசை அமைப்பது, அமைச்சரவையை உருவாக்குவது, பிரதமரை நியமிப்பது, அரசுக்கு அறுதிப்பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொடுப்பது போன்ற விடயங்களில் மட்டுமல்லாது, எதிர்கால சமாதான முன்னெடுப்புக்களை எவ்வாறு மாற்றியமைப்பது, விடுதலைப்புலிகளை எவ்வாறு பலவீனப்படுத்தி அதிலிருந்து ஓரங்கட்டவைப்பது போன்ற சகல அம்சங்களிலும் இந்தியா தனது அறிவுறுத்தலின் கீழ் இலங்கையின் புதிய அரசை ஆட்டிப்படைக்கத் தொடங்கிவிட்டது என்பது எவராலும் நிராகரிக்க முடியாத உண்மையேயாகும்.

இந்தியாவின் இப்புதிய அணுகுமுறைக்குச் சார்பாக இந்தியாவின் இந்துத்துவ சிந்தனை ஆதிக்கம் மிக்க வெகுசன தொடர்பு ஊடகங்களும் தமது கருத்தியல் ஊடுருவலை மேற்கொள்ளத்தொடங்கியுள்ளன. இது ஒரு நன்கு திட்டமிட்ட இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் புலனாய்வு அமைப்புக்களின் செயற்பாட்டு வலையமைப்பின் ஒரு முக்கிய கூறேயாகும்.

திராவிட சிந்தனையாளருக்கும், தமிழுணர்வாளர்களுக்கும் எதிரான பார்ப்பன சமூகத்தவரின் மேலாதிக்கக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இந்திய ஊடகங்கள் பலவும் அண்மையில் கருணா தொடர்பான செய்திகளுக்கு கொடுத்த உண்மைநிலைக்கு மாறான கருத்தியல் பிரசாரங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

விடுதலைப்புலிகள் என்ற மாபெரும் தமிழரின் அரசியல் இராணுவக்கட்டமைப்பின் வலிமையை சிதைக்க கருணா என்ற தனிமனித துரோகிக்கு கொடுக்க முனைந்த பிரசார பலம் நகைப்புக்கிடமானதாக முடிந்து விட்டமையினால் மேற்படி தொடர்பு சாதனங்கள், ஊடகங்கள் ஏமாற்றமும், வெட்கமும் அடைந்துள்ள போதிலும் தொடர்ந்து கருணாவை நியாயப்படுத்த முயற்சிப்பதுதான் கேலிக்கிடமான விடயமாகும்.

குறிப்பாக இந்து என்ற ஆங்கில நாளிதழ் கருணா புலிகளால தோற்கடிக்கப்பட்ட போது அவரை பாதுகாக்க எவரும் முயலவில்லையே என தன் கவலையை கண்ணீர்விடாக் குறையாக ஒப்பாரி வார்த்தைகளில் தனது ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதுடன் நடந்து முடிந்த தேர்தலின் கூட்டமைப்பிற்குக் கிடைத்த பாரிய வெற்றியை தகுதி பெறாத ஒன்று என்றும் வர்ணித்து தன் ஆற்றாமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்திய பார்ப்பனிய ஆதிக்க அரசுகளோ, வெகுசன தொடர்பு ஊடகங்களோ இலங்கைத் தமிழரின் பிரச்சினைகளை எப்படி அணுகிவந்துள்ளன என்பதும், இனியும் என்னநோக்கில் அவை அணுகும் என்பதும் தமிழ்மக்கள் நன்கு அறிந்திருந்த விடயமேயாகும்.

அவர்களின் இந்த அணுகுமுறைகள் தமிழ்மக்களின் எழுச்சியை தமிழர் தலைமையின் ஆளுமைத்திறனைப் பொறுக்க முடியாத வாய்ச்சொல்வீரர்களின் பாராட்டுக்களையும் கைதட்டல்களையும் பெறலாம்... இன உணர்வும் இனமானமும் மிக்க இலட்சிய மக்களை எதுவுமே செய்யாது, எவ்வகையிலும் பாதிக்காது என்பதை வரலாறு உணர்த்தியே தீரும்.

## நாடும் நடப்பும்

தற்போதைய சமாதான முன்னெடுப்பை முற்றாக நிராகரிக்கும் அணிகள் புதிய அரசில் ஒன்றிணைந்துள்ளமையால் சமாதானப்பேச்சுக்களின் எதிர்காலம் ஆபத்தை எதிர்கொள்ளும் என்றே தெரிகிறது. - ஆய்வாளர் கருத்து.




# பதின்மூன்றாவது நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவராக ரணில்?

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

இவரை எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்வதில் ஏனைய சிறிய கட்சிகளுக்கு ஆட்சேபனை இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரைத் தெரிவுசெய்வதில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் கரு ஜயசூரிய, முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரின் பெயர்களும் எதிர்க்கட்சிகளால் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவையே எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டுமென, ஐக்கிய தேசியக் கட்சியின் அநேகமான உறுப்பினர்களும், இலங்கை தமிழரசுக்கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.

எனவே, ரணில் விக்கிரமசிங்கவே எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவுசெய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக எதிர்க்கட்சித் தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பார் என நம்பப்படுகிறது.

# புலிகளுக்கு வளைந்து கொடுத்ததே ஐ.தே.க. தோல்விக்குக் காரணமாம்!

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தீர்மானங்களில் கள்வர்களும், காடையர்களும், கொள்ளையர்களும் பங்கேற்றதாலேயே இந்தமுறை பொதுத்தேர்தலில் கட்சி தோல்வியடைந்ததாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தமுறை தோல்வியைத் தழுவிய முஸ்லிம் காங்கிரஸுக்கு நான்கு தேசியப்பட்டியல் நியமனங்களை வழங்கியுள்ளதாகத் தெரிவித்த அவர், அந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, தமக்கு தேசியப் பட்டியலில் இடம் ஒதுக்கியிருக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுக்கு வளைந்து கொடுக்கும் போக்கைக் கொண்டிருந்ததாலேயே - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதிகமாக விட்டுக்கொடுப்பதாக மக்கள் மத்தியில் ஏற்பட்ட கருத்தே, கட்சியின் தோல்விக்கு காரணம் எனவும் தெரிவித்த அவர், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாகத் தாம் நியமிக்கப்படவிருப்பதாக வெளிவரும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் தெரிவித்தார்.

# அரசியலமைப்பு நிர்ணய சபை பற்றி எதிர்க்கட்சிகளுடனும் ஆராயப்படும்!

## அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

அரசியல் யாப்பை மாற்றியமைப்பதற்கான அரசியலமைப்பு நிர்ணயசபை குறித்து, எதிர்க்கட்சிகளிடமும் அபிப்பிராயம் பெறப்படும் என ஜனாதிபதியின் ஆலோசகரும் அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல்நிலை குறித்து வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றுவது என்ற ஜனாதிபதியின் ஆலோசனை குறித்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு ஆராய்ந்து வருகிறது. அந்தக் குழு நாளை திங்கட்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து ஆரம்பக் கட்ட நட வடிக்கைகள் பற்றி ஆராயும். பிரதானமாக ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடுவார். அரசியலமைப்பு மாற்றத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாத்திரம் செய்யமுடியாது. சகல கட்சிகளின் ஒத்துழைப்பும் அதற்கு அவசியம்.

தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பை மாற்றுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துவருகிறார். நாடாளுமனறம் எதிர்வரும் 22 ஆம் திகதி கூடியதும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு நிர்ணயசபையாக மாற்றுவது குறித்து எதிர்க்கட்சிகளின் அபிப்பிராயங்களும், ஆலோசனைகளும் பெறப்படும்.

நாடாளுமன்றத்திற்கு வெளியேயுள்ள அரசியல் கட்சிகள், அரசியலமைப்பு நிபுணர்கள், புத்திஜீவிகள் ஆகியோரின் ஆலோசனைகளும் அபிப்பிராயங்களும் பெற்றுக்கொள்ளப்படும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மாற்றம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து அரசியலமைப்பு மாற்றத்திற்கான ஆரம்பக்கட்ட ஏற்பாடுகளின்போது ஆராயப்படும். அரசியலமைப்பு மாற்றத்திற்கான ஜனாதிபதியின் ஆலோசனை குறித்து ஆராய்வதற்காக அவரால் நியமிக்கப்பட்ட குழு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அந்தக் குழு கடந்த வெள்ளியன்று ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடியது. நாளை மீண்டும் சந்தித்து தமது நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் எனத் தெரிவித்தார்.

தெற்குத் திசையிலிருந்து...

இந்திரஜித்

# அரசு தனது பெரும்பான்மை வலுவை நிரூபிக்குமா? ஜனாதிபதி சந்திரிகா புதிய சவால்களை சமாளிப்பாரா...?



**மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பயன்படுத்தி நாட்டில் இரண்டாவது அரசியல் சக்தியாக மாறும் நகர்வை படிப்படியாக மேற்கொண்டுவருகிறது. இதன் அடிப்படையில் அந்த முன்னணிக்கு கிடைக்கவுள்ள 4 அமைச்சுக்களும் தேர்தல் ஒன்றில் வாக்குகளை அள்ளிக்கொள்ளும் முயற்சியின் ஒரு கட்டமே எனக் கருதப்படுகிறது.**

இலங்கையின் புதிய அரசாங்கம் தனது பலத்தை நிரூபிக்க இன்னும் ஆறு நாட்கள் எஞ்சியுள்ளன. பெரும்பான்மை சிங்கள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட போதியவலுவற்ற அரசாங்கம் ஒன்று நாடாளுமன்றத்தில் தமது ஆசனங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது.

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள மக்கள் மத்தியில் வீழ்ச்சியை கண்டது. மக்கள் விடுதலை முன்னணியின் உதவியால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் ஒருமுறை அரசாங்கத்தை பொறுப்பேற்றுள்ளார்.

இதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது ஏற்பட்டிருந்த இரு கட்சி நிர்வாக முறை தற்காலிகமாகவேனும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக மக்கள் வழங்கிய தீர்ப்பு என முழுமையாகக் கூறமுடியாது.

இலங்கையில் இடம்பெற்ற போர் ஒன்றின் காரணமாக வாழ்க்கைச் செலவில்



ஏற்பட்டுள்ள அதிக பழுவின் எதிர்த் தாக்கமே இதுவாகும் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பதவி விலகச் செய்திருந்தார்.

இதற்குப் பின்னர் அவர் அழைப்பு விடுத்திருந்த தேர்தலில் அவருக்கு தோல்வி ஏற்பட்டிருக்குமானால் அது அவரின் அரசியல் வாழ்வுக்கு முடிவைக் கொண்டுவந்திருக்கலாம். இதனைத் தவிர்த்துக் கொள்வதற்காக முன்னெச்சரிக்கையாகவே தம்முடன் உடன்பட்டு செல்லமுடியாத மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுத் தேர்தல் ஒப்பந்தத்தை அவர் செய்துகொண்டார்.

அதிகார ஆசை அவரின் முன்னே நிழலாடிக் கொண்டிருக்க தமது கட்சி நலனைக்கூட இந்த உடன்பாட்டின்போது ஜனாதிபதி கருத்திற்கொள்ளவில்லை. தமது அரசியல் வாழ்வில் முதன்முறையாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றில் சுற்றுலாத் துறை அமைச்சராக பதவி ஏற்றுள்ள அனுரா பண்டாரநாயக்க புதிய துறைமுகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர போன்றோரின் அதிக அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதி மக்கள் விடுதலை முன்னணியுடன் இணக்கப்பாட்டுக்குச் செல்லவேண்டியிருந்தது.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதியமைச்சர் சரத் அமுனுகம மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் மக்கள் விடுதலை முன்னணியுடனான ஒப்பந்தத்துக்கு தமது பூரண விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை.



ஆனால், வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பாகவே நடந்துகொண்டார். இதற்கு கைமாறு செய்யும் வகையில் லக்ஷ்மன் கதிர்காமரையே இலங்கையின் 18 ஆவது பிரதம மந்திரியாக நியமிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி பரிந்துரை செய்திருந்தது.

இவையாவும் நடந்துமுடிந்துள்ள நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான தேர்தல் ஒப்பந்தத்தில் எதிர்த்தாக்கங்கள் தற்சமயம் வெளிவரத் தொடங்கியுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பயன்படுத்தி நாட்டில் இரண்டாவது அரசியல் சக்தியாக மாறும் நகர்வை படிப்படியாக மேற்கொண்டுவருகிறது. இதன் அடிப்படையில் அந்த முன்னணிக்கு கிடைக்கவுள்ள 4 அமைச்சுக்களும் தேர்தல் ஒன்றில் வாக்குகளை அள்ளிக்கொள்ளும் முயற்சியின் ஒரு கட்டமே எனக் கருதப்படுகிறது.

மக்கள் விடுதலை முன்னணி கிராமியப் பொருளாதாரம், விவசாயம், கலாசாரம் காணி போன்ற துறைகளில் தமது அமைச்சுகளைப் பெற்றுள்ளது. இவை அனைத்தும் மக்களுக்காக சிறப்பாக சேவை செய்யக்கூடிய அமைச்சுக்களாகும்.

இவற்றை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்வதன்மூலம் நாட்டின் 2.'.3 பங்கை வகிக்கும் கிராமிய மற்றும் விவசாயத்துறை மக்களின் வாக்குகளுக்கு தற்போதே மக்கள் விடுதலை முன்னணியினர் குறிவைத்துவிட்டனர்.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சுக்களான நிதி மற்றும் திட்டமிடல் போன்ற அமைச்சுக்களைப் பொறுப்பேற்றால் அதன் மூலம் தற்போதைய வீழ்ச்சிப் பொருளாதார சூழ்நிலையில் மக்களிடமிருந்து வெறுப்பையே சம்பாதித்துக்கொள்ளமுடியும். எனவேதான், அவற்றைத் தவிர்த்து கிராமிய மட்ட அமைச்சுக்களை மக்கள் விடுதலை முன்னணி சாதுரியமாக கைப்பற்றியுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் இந்த அமைச்சுக்கள் தொடர்பில் பெரிதாக அலட்டிக் கொள்ளாத ஜனாதிபதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தரப்பினர் தற்சமயம் மக்கள் விடுதலை முன்னணியின் சாதுரியத் தன்மையை புரிந்து கொண்டுள்ளனர்.

எனவே தான் விவசாயத் துறையில் உள்ளடங்கியுள்ள மகாவலி அபிவிருத்தி திட்ட அமைச்சினைத் தக்கவைத்துக் கொள்ள அந்தக் கட்சி முயற்சித்தது. அதேபோல கலாசாரத் துறையிலும் திரைப்பட



அங்கத்தை தம்வசமே வைத்துக்கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி முயற்சித்தது.

எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் ஜனாதிபதியை ஆட்டிப் படைக்கும் மக்கள் விடுதலை முன்னணி இதனை எதிர்த்தது. இந்த எதிர்ப்பானது ஏற்கனவே வலுவற்ற நிலையில் இருக்கும் தமது சிறுபான்மை அரசாங்கத்தை நகரமுடியாமல் செய்துவிடும் என ஜனாதிபதி எண்ணினர். எனவே, குறிப்பிட்ட இரண்டு துறைகளையும் மக்கள் விடுதலை முன்னணிக்கே அளிப்பது என ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார்.

இதுவும் அவருடைய அரசியலைப் பொறுத்தவரையில் விட்டுக்கொடுப்பென்றில்லாமல் தவிர்க்கமுடியாத செயல் என்றே கருதப்படுகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரையில் நாடாளுமன்றம் கூட்டப்படும் வேளையில் இரண்டு பாரிய் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். தாம் பரிந்துரைக்கும் ஒருவரை நாடாளுமன்ற சபாநாயகராக பதவியில் அமர்த்த வேண்டும் என்பனவே அவை. இரண்டுமாகும். இதில் பெரும்பான்மை பலம் என்ற விடயம் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தற்சமயம் நாடாளுமன்றத்தில் 106 ஆசனங்கள் இருக்கின்றன. ஜாதிக ஹெல உறுமய ஆதரவளிக்குமானால், அந்த முன்னணியால் பெரும்பான்மைக்கு மேலதிகமாக ஒரு ஆசனத்தை அதாவது 114 ஆசனங்களை உறுதிப்படுத்தமுடியும்.

ஏனெனில், வடக்கு - கிழக்கில் தெரிவாகியுள்ள தமிழரசுக் கட்சியின் 22 பேரும் இந்த முன்னணிக்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார்கள். அதேபோல இதுவரையில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணங்கிச் சென்றுகொண்டிருக்கும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி என்பன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மை ஆசன நிரூபிப்பு நிகழ்வுக்கு ஆதரவு வழங்க மாட்டாத கொள்கையை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மறுபுறத்தில் சபாநாயகர் தெரிவிலும் இவ்வாறான நிலைமையே எதிர்நோக்கப்படுகிறது.

சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசிய முன்னணி டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாவின் பெயரை பரிந்துரைத்துள்ளது. அரசாங்கத் தரப்பு முன்னர் முன்னாள் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை சபாநாயகர் பதவிக்கு பரிந்துரை செய்யவிருந்தபோதும் தேசியப் பட்டியலில் ஏற்பட்ட சட்டச் சிக்கல் காரணமாக முன்னணியில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் டியூ.குணசேகரவை அந்தப் பதவிக்கு பரிந்துரைக்க முடிவெடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை நிரூபிப்பைக் காட்டிலும், சபாநாயகர் தெரிவின் போது சந்திரிகா குமாரதுங்கவினது அரசாங்கத்தின் வீழ்ச்சி நிலை தெரிந்துவிடுமென ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண சவால் விடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நகர்வுகளுக்கு அப்பால் 1977 ஆம் ஆண்டின் அரசியலமைப்பை மாற்றி அமைப்பது மற்றும் தேசிய அரசாங்கக் கொள்கை என்ற விடயங்களும் இலங்கை அரசியலில் பலமாக பேசப்படுகின்றன.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்கு தாம் பிரதம மந்திரியாக வரவேண்டும் என்ற முயற்சியில் ஜனாதிபதி தற்சமயம் ஏற்பாடுகளை செய்து கொண்டு இருக்கிறார். இதன்மூலம் தமது பங்காளிக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் முதலாவது கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என ஜனாதிபதி எண்ணம் கொண்டிருக்கிறார். அதன் மூலம் மீண்டும் தாம் நாடாளுமன்றத்திற்கு பிரவேசிப்பதற்கும் அதற்கான சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றிபெற முடியும் என்பதுமே ஜனாதிபதியின் கருத்தாக இருந்து வருகிறது.

இவ்வாறாக தமது இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்ளுவதற்குப் பின்னர் தமக்கு உள்ளக சவாலாக விளங்கும். மக்கள் விடுதலை முன்னணியை கைவிட்டு தேசிய அரசாங்கம் ஒன்றிற்கு செல்வதையும் அவர் குறிக்கோளாக கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதியை பொறுத்தவரையில் தேசிய அரசாங்கம் அவசியம் என்ற போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் அவ்வாறான அவசியம் உடனடியாக எழவில்லை.

தமது ஆட்சியை பலாத்காரமாக கலைத்த ஜனாதிபதி அரசியலில் தகுந்த பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும். அவருக்கு வாக்களித்தமைக்காக பெரும்பான்மை மக்களும் சிந்தித்துக் கவலைப்பட வேண்டும். அதன் மூலம் தாம் 6 மாத காலப்பகுதியிலோ ஒரு வருடத்துக்குள்ளோ ஆட்சியை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்பார்ப்பாகும்.

---

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை உடனடியாக நிறைவேற்றக்கூடிய வகையில் வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில் முயற்சியின் பயிற்சியை நிறைவு செய்துள்ளோம்.

இந்த ஒருவருட பயிற்சிநெறியினை நிறைவுசெய்த எமக்கு உதவிகள் வழங்கப்பட்டால், குழுக்களாக இணைந்து சுயதொழில் நிலையங்களை அமைத்து உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இதன் மூலமாக நாம் வளர்ச்சியடைவதுடன் எமது கிராமத்திலுள்ளவர்களுக்கும் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இதன் மூலம் கிராமங்களில் இடம்பெறும் தேவையற்ற பிரச்சினைகளில் இருந்து எம்மை விடுவித்துக் கொள்ளலாம். எமது உற்பத்திப் பொருட்களை எமது பிரதேசங்களில் விற்பனை செய்யக்கூடிய வசதிகளையும் ஏற்படுத்தவேண்டும்.

ஊக்குவிப்புப் பணத்துடன்கூடிய இந்த ஒருவருட தையல் - மனையியல் டிப்ளோமா பயிற்சியினை கிராம சேவையாளர் பிரிவுகள் ஊடாக ஒவ்வொரு வருடமும் நடாத்தி வருவது எமக்கு கிடைத்த பெரும் பேறாகவே கருதுகிறோம். வேலையற்று வீட்டில் இருக்கும் ஒவ்வொரு யுவதிகளும் இப்பயிற்சி நெறியில் இணைந்துகொள்ள வேண்டும்.

இதன்மூலம் சமூகத்திலும் சரி வீட்டிலும் சரி தமக்கான ஒரு இடத்தைத் தக்கவைக்க முடியும். இப்பயிற்சியினை பூரணமாக நிறைவு செய்வதன்மூலம் தமக்கான ஒரு இடத்தை எதிர்காலத்திலும் நிலையாக வைத்துக் கொள்ளமுடியும்.

பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளப்படும் இப்பயிற்சியானது இன்றைய வளர்ச்சிகள், தேவைகள் அதிகமான காலத்திலும், நவீன தொழில்நுட்ப கருவிகளின் பாவனைகள் நாளுக்கு நாள் வெவ்வேறு விதமாக வளர்ந்துவரும் காலத்தில் வரவேற்கத்தக்கது மட்டுமன்றி பாராட்டுக்குரிய ஒரு செயலாகும். கிராமிய ரீதியாக வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதுடன் நகரத்துடனான உறவுகளையும் வலுப்படுத்தும் முகமாகவே இப்பயிற்சிநெறிகள் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் இப்பயிற்சி நெறியில் இணைந்து பூரணமான பயிற்சிகளைப் பெற்று சுதந்திரமாக சுய தொழில்களை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு யுவதிகளும் முன்வரவேண்டும். இதன் மூலமாக தாம் வளர்வதுடன் தம்மை சார்ந் திருப்போரையும் வளர்த்துக் கொள்ளலாம்.

# சீனாவில் குளோரின் வாயுக் கசிவு ஒன்பது பொதுமக்கள் உயிரிழப்பு



(சீனா)

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் குளோரின் வாயுக கசிவினால் 9 பேர்வரை கொல்லப்பட்டனர். 1 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வாயுக்கசிவு ஏற்பட்ட பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

சீனாவின் நகரான சொங்குயிங்கில் இரசாயான தொழிற்சாலையொன்றில் ஏற்பட்டிருந்த வாயுக்கசிவினால் இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட வாயுக்கசிவினால் இதுவரை குளோரின் வாயு சேமித்து வைக்கப்பட்ட 3 தாங்கிகள் வெடித்துச் சிதறியுள்ளன.

சீனாவின் வேலைத்தளங்களில் தொழிலாளர் பாதுகாப்புக்கள் திறமையாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மரணமடைந்தும் காயமடைந்தும் வருகின்றனர். மக்கள் நெருக்கமாக வாழும் பிரதேசமான சொங்குயிங்கில் வாயுக் கசிவு ஆரம்பித்துள்ளது. தொழிற்சாலையில் வாயுக் கசிவு ஏற்படுவது தெரிந்தவுடன், காவலாளி அருகில் அமைந்துள்ள குடியிருப்புப் பிரதேசங்களில் வாழும் மக்களை வெளியேறுமாறு கேட்டிருந்தார்.

இதேவேளை குளோரின் வாயுவை சுவாசிப்பதனால் மக்களுக்கு ஏற்படவுள்ள ஆபத்தினை குறைத்துக்கொள்வதற்காக வாயுவை நீருக்குள் செலுத்தியிருந்தார்கள். ஆனால் குளோரின் வாயு அடைக்கப்பட்டிருந்த தாங்கிகள் வெடித்ததனால் மக்களை வெளியேற்ற வேண்டியிருந்தது.

இதேவேளை ஒரு மனிதனுக்கு மரணத்தை ஏற்படுத்த 2.5 மில்லிக்கிராம் குளோரின் போதுமானது என ஏ.எவ்.பி செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

# கொலம்பிய கடற்படைக் கப்பலில் போதைப்பொருள் கண்டுபிடிப்பு



கொலம்பியக் கடற்படைக் கொடியைக் கொண்ட குளோரியா என்ற கப்பலில் போதைப பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பெருவியன் ஜனாதிபதி அவிஜான்ட்றோ மேற்படி கப்பலுக்கு விஜயம் செய்த போது இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மிகவும் பிரபல்யமான இந்தக் கப்பல் 'கொலம்பிய நாட்டின் பெருமை' என்ற பெயரைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கப்பல் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டிருந்தது. கொலம்பியாவின் பெயரைப் பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன் இந்தக் கப்பல் இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. இதுவரை நடந்த அவமரியாதையான நடத்தைகளில் இதுவே அண்மையில் நடந்ததாகவும் இதனால் கொலம்பியப் பாதுகாப்புப் படைக்கு அவதூறு ஏற்பட்டுள்ளது என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கொலம்பிய ஜனாதிபதி அல்வேரோ யூரிவி - நடந்த சம்பவத்தைக் கண்டித்து கப்பலில் பணியாற்றிய 75 மாலுமிகளையும் பதவிநீக்கம் செய்தார்.

16.5 கிலோ ஹெரோயின், 10 கிலோ ஹோக்கெயின் என்பன கப்பலின் இயந்திர அறையில் மறைக்கப்பட்டிருந்தது என்றும், அதை அதிகாரிகள் கண்டுபிடித்தார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. கண்டெடுக்கப்பட்ட போதைப் பொருட்களின் பெறுமதி பல கோடி அமெரிக்க டொலர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கப்பல் சரித்திரப் பிரசித்திபெற்றதுடன் மூன்று தளங்களைக் கொண்டதாகும். இப்படியான நடவடிக்கைகள் நடப்பதிலும் பார்க்க கப்பலை பாழடையவிட்டிருக்கலாம் என்வும் எமது தேசிய கௌரவம் பாழடைகிறதே என்றும் கொலம்பிய அரச பிரமுகர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

# அமெரிக்கப் படைவீரர் ஈராக்கில் கடத்தப்பட்டார்



(பக்தாத்)

ஈராக்கில் சென்றவாரம் எரிபொருள் எடுத்துச்சென்ற அமெரிக்க வண்டித் தொடர்மீது தாக்குதல் நடத்தப்பட்டவேளையில் அமெரிக்கப் போர்வீரர் ஒருவர், சதாம் ஆதரவாளர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

அராபிய தொலைக்காட்சியான 'அல் ஜெசீரா'வில் வீடியோ பிரதியொன்று ஒளிபரப்பப்பட்ட வேளையில், கடத்தப்பட்ட போர் வீரரான 'ஹெயிட் மத்தியூ மொப்'பினை அவரது உறவினர்கள் அடையாளம் கண்டனர்.

ஒளிபரப்பப்பட்ட காட்சியில் - உருமறைப்புச் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்து தரையில் இருந்த ஒருவர் அடையாளம் காணப்பட்டிருந்தார். துப்பாக்கி ஏந்திய பலர் அவரைச் சுற்றி காவல்புரிந்ததையும் அவதானிக்க முடிந்தது.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் தொடர்பாக வீடியோ பிரதியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர் ஒரு அமெரிக்கப் படைவீரர். அவர் இஸ்லாமிய சட்டங்களுக்கிணங்கவே பராமரிக்கப்படுகிறார். அவர் நலத்துடன் காணப்படுகிறார். அத்துடன் அமெரிக்கப் படையினால் கைது செய்யப்பட்ட கைதிகள் விடுவிக்கப்பட்டால் மாத்திரமே அமெரிக்கப் படைவீரர் விடுவிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



இதேவேளை 'ஹெயிட் மத்தியூ' தன்னைப் பற்றிக் குறிப்படும்போது-

நான் திருமணம் செய்துள்ளேன். எனக்கு 10 மாதக் குழந்தை ஒன்று உள்ளது. நான் ஈராக்கை விடுவிப்பதற்காகவே வந்தேன். இங்கு வருவதற்கு நான் ஆரம்பத்தில் விரும்பவில்லை' எனத் தெரிவித்திருந்தார்.

பி.பி.ஸியின் மைக்கல் புச்னம் - இந்த வீடியோக் காட்சிகள் மற்றும் ஈராக்கில் தற்போது தொடரும் பணயக் கடத்தல் சம்பவங்கள் என்பன அமெரிக்க மக்களை பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாக்குவதாகத் தெரிவித்தார்.




# அமெரிக்க ஊடகவியலாளர் கொலை சந்தேக நபர் பாகிஸ்தானில் கைது

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க ஊடகவியலாளரான டானியல் பேர்ள் - 2002 ஆம் ஆண்டு தை மாதம், பாகிஸ்தானின் கராச்சி நகரில் இஸ்லாமியத் தீவிரவாதம் தொடர்பான கட்டுரை ஒன்றிற்காக தகவல்கள் சேகரித்துக் கொண்டிருந்த வேளையில் கடத்தப்பட்டு, பின்னர் கொல்லப்பட்டார்.

பேர்ளைக் கடத்திக் கொலை செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரைத் தாம் கைதுசெய்துள்ளதாகப் பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பல தாக்குதல்களில் சம்பந்தப்பட்டிருந்த 28 வயதுடைய 'மாலிக் ரச்சாடக்' - பத்திரிகையாளர் பேர்ளைக் கொலை செய்ததாக, பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இவர் தடைசெய்யப்பட்ட அமைப்பான 'இஸ்லாமிக் லஷ்கார் இ ஜங்வீ' யின் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரைப் பற்றித் தகவல் கொடுப்போருக்கு 17 ஆயிரம் டொலர்கள் சன்மானம் வழங்கப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இவர் - 'ஷியா' முஸ்லிம்கள் மீது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடத்தப்பட்ட தாக்குதல்களுடன் தொடர்புடையவர் எனவும் கருதப்பட்டிருந்தார்.

பத்திரிகையாளர் பேர்ள் கடத்தப்பட்டது தொடர்பாக நான்கு இஸ்லாமியத் தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் குற்றம் சாட்டியிருந்தது. ஆனால் 'பேர்ள்' மரணமடைவதற்கு முன்னர் அவரது தொண்டையை கத்தியால் வெட்டும் வீடியோ ஒளிநாடாவில் மேலும் மூவர் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், பிரித்தானியாவில் பிறந்த முஸ்லீம் தீவிரவாதியான ஒஷ்மகர் சயீட் சேக் - ஆரம்பத்தில் பாகிஸ்தான் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் கருதப்பட்டிருந்தார்.

## பர்மாவின் தலைநகர் ரங்கூனிலுள்ள

# எதிர்கட்சி அலுவலகம் மீளத் திறக்கப்பட்டது



பர்மாவின் தலைநகர் ரங்கூனில் கடந்த ஒருவருடமாக மூடப்பட்டிருந்த எதிர்க்கட்சியின் தலைமைக் காரியாலயம் மீண்டும் திறக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகி ஓராண்டுககு முன்னர் கைதுசெய்யப்பட்டபோது, இந்தக் காரியாலயம் மூடப்பட்டது. தேசிய ஜனநாயக லீக் கட்சியின் இரு முக்கிய உறுப்பினர்களும் பர்மிய இராணுவ ஆட்சியாளர்களால் விடுவிக்கப்பட்டனர். இதனால், எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகியும் விரைவில் விடுவிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது.

ஆங் சான் சூகியும் அவரது கட்சியின் மற்றுமொரு அங்கத்தவரான 'ரின் ஓ' வும் தொடர்ந்தும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்ற ஆண்டு பர்மாவில் இராணுவ ஆட்சியாளரான 'யுன்ராவின்' அங்கத்தவர்களுக்கும் எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கும் இடையே ஏற்பட்டிருந்த மோதல்களின் பின் ஆங் சான் சூகியும் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆங் சான் சூகியின் கட்சியின் இரு முக்கிய உறுப்பினர்கள் ஆளும் இராணுவ ஆட்சியாளர்களினால் மாநாடொன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இந்த மாநாட்டில் ஏழு கட்டங்களை உள்ளடக்கிய ஜனநாயகத்துக்கான பாதை வரைபு தொடர்பான முதல் கட்டப் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த இருவரும் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு பேச்சுக்களுக்கு அழைக்கப்பட்டிருந்தமை ஆங் சான் சூகியின் விடுதலை மீது நம்பிக்கை அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, சென்ற வாரம் ஜக்கிய நாடுகளின் செயலர் கோபி அனான், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை தொடர்பாக ஆளும் இராணுவ அமைப்பான 'யுன்ராவிடம்' கேட்டிருந்தார்.

# ஸ்பெயின் புதிய பிரதமர் நேற்றுப் பதவியேற்றார்



ஸ்பெயின் தலைநர் மட்ரிட்டில் உள்ள அரசமாளிகையில் புதிய ஸ்பெயின் பிரதமர் நேற்றுப் பதவியேற்றார்.

ஜோசி லூர்யிஸ் ரெட்றிக்கஸ் சப்பாரிரோலே பதவி ஏற்ற ஸ்பெயினின் புதிய பிரதமராவர். இவரின் பதவியேற்பை தொடர்ந்து அவர் அமைச்சரவையை அமைப்பார் என நம்பப்படுகிறது.

43 வயதுள்ள புதிய ஸ்பெயின் பிரதமர் முன்பு எதுவிதமான அமைச்சரவைப் பதவியையும் வகிக்காதவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் அனுபவம் அற்ற அரசியல்வாதி என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் அவரின் அமைச்சரவை திறமையான அனுபவம் கொண்டவர்களையே உள்ளடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிகில் ஏஞ்சல் மொருட்டீனோ புதிய வெளிநாட்டு அமைச்சராகப் பதவியேற்பார். இவர் ஏழு வருடமாக ஐரோப்பிய ஒன்றியத்தில் வெளிநாட்டுத் தூதுவராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் புதிய பிரதமருக்கு பல இடங்களில் கைகொடுத்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா.சபையின் பங்களிப்பு இல்லாத பட்சத்தில் - ஸ்பெயின் ஈராக்கில் நிலைகொண்டுள்ள படைகளை மீளஅழைக்கும் என்பதே புதிய பிரதமரின் கொள்கையாகும்.

முன்னைய ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார ஆணையாளர் பெற்ரோ சொலிபி ஸ்பெயினின் நிதிமந்திரியாகிறார். இவர் மிகவும் அனுபவமிக்க பொருளியலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய பிரதமர் சப்பாரீரோ - பெண்களுக்கு தனது அமைச்சரவையில் முக்கிய இடம் கொடுக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

16 அமைச்சைக் கொண்ட அரசாங்கத்தில் 8 அமைச்சுக்களைப் பெண்களுக்கு கொடுக்கவும், துணைப் பிரதமராகப் பெண்ணொருவரை நியமிக்கவிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்கள் ளள தெரிவிக்கின்றன.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# முல்லைத்தீவு கடற்பரப்பில் 2 மீனவரைக் காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் காணாமற்போயுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு சிலாவத்தையைச் சேர்ந்த ஏ.கமலநாதன், அன்ரனி ஆகிய இரு மீனவர்களே காணாமற்போயுள்ளனர்.

இவர்களைத் தேடும்பணி மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை எதுவிதபலனும் கிடைக்கவில்லை என்று கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

# பூவரசங்குளப் பகுதியில் இரண்டு படையினர் காயம்

(வவுனியா)

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் - நேற்றுக் காலை இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் ஒன்றும், கார் ஒன்றும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இராணுவத்தினரும் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை ஆறு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

விடுமுறையில் வீடு செல்வதற்காக வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற படைச்சிப்பாய் எதிரே வந்த காருடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற படைச் சிப்பாயும் பின்னால் இருந்த அதிகாரியும் படுகாயமடைந்தனர்.

இவ்வாறு படுகாயமடைந்த இருவரும் உடனடியாகவே வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளும், காரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. வவுனியா பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (03)

# விடுமுறையில் சென்று திரும்பிய இராணுவச் சிப்பாய் தற்கொலை

## திருமலையில் சம்பவம்

திருகோணமலையிலுள்ள 22 28 டிவிஷன் தலைமையகத்தில் பணியாற்றிய இராணுவச்சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

காமினி காரியப்பெரும (வயது 35) என்ற இராணுவச் சிப்பாயே தற்கொலை செய்துகொண்டவராவார். நேற்றுக் காலை 11 மணியளவில் இவர் தனது ரி 56 ரகத் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக கூறப்படுகிறது.

வீட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இவர் தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமலை சீனன்குடாப் பகுதியைச் சேர்ந்த இந்தச் சிப்பாய் புதுவருடத்தை முன்னிட்டு வீட்டிற்கு விடுமுறையில் சென்று விட்டு திரும்பிய மறுநாளே இராணுவமுகாம் விடுதியில் இவர் தற்கொலை செய்துகொண்டார்.

இராணுவப்பொலிஸாரும் திருமலை தலைமையகப் பொலிஸாரும் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (04)

## அமைச்சர்....

அத்தியாவசிய உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு மாத்திரம் இந்தச் சுற்றுப் பயணத்தினைப் பயன்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய ஒழுக்கக்கோவைக்கு அமைய இந்த ஆண்டு அமைச்சுக்களினதோ திணைக்களங்களினதோ அதிகாரிகளை இடமாற்றம் செய்யப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட மேல் மாகாணசபைத் தேர்தலில் 3000 கண்காணிப்பாளர்கள் பணியில்!

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாண சபைக்கான தேர்தலைக் கண்காணிப்பதற்கு சுமார் மூவாயிரம் கண்காணிப்பாளர்களை பவ்ரல் அமைப்பு நியமித்திருப்பதாகத் தெரியவருகிறது.

வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த மாகாண சபைக்கான 52 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தலில் - 12 அரசியல் கட்சிகளும் 07 சுயேட்சைக் குழுக்களும் போட்டியில் குதித்துள்ளன.

மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தபால் மூலமான வாக்களிப்புக்கு 30 ஆயிரம் அரச ஊழியர்கள் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நாளைவரை இடம்பெறும்.

மேலும் தேர்தல் காலத்தில் இடம்பெறக்கூடிய வன்முறைகளைத் தடுக்கும் நடவடிக்கையில் 2200 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியே அரசியல் யாப்பை மாற்றவேண்டும்!

## ரவூப் ஹக்கீம் வலியுறுத்து

அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டுவருவதனால் சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுதல் வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

பெரும்பான்மை ஆசனங்களின்றி ஆட்சியமைத்துள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி தான் நினைத்தபடி அரசியலமைப்பை மாற்ற எண்ணுவதே ஜனநாயகத்துக்குப் புறம்பான செயலாகும்.

ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இவ்வாறு யாப்பில் மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவாராக இருந்தால் அது சிறுபான்மையினருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்.

அவ்வாறு ஒரு மாற்றத்தை யாப்பிலே கொண்டுவர முயன்றால் எமது எதிர்ப்பை நாம் நாடாளுமன்றில் வெளிப்படுத்துவோம். யாப்புக்கு அமைவாக செயற்படவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கும் உண்டென்பதை மறந்துவிடக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமைச்சரவை நியமன...

ரிகா குமாரதுங்க, ஜே.வி.பியின் உயர் மட்டத் தலைவர்களை பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தப் பேச்சுக்களில் - ஜே.வி.பி சார்பில் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ச நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக, அநுரதிஸநாயக்க, ஆகியோர் பங்கேற்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர்கள் நியமனம் தொடர்பாக இருந்து வந்த இழுபறி நிலமைக்கு தீர்வு காணப்பட்டது.

இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டதையடுத்து, ஜே.வி.பி சார்பிலான அமைச்சர்கள் அடுத்த சில தினங்களில் அமைச்சர்களாக பதவியேற்பது என முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை - ஜே.வி.பி சார்பில் அமைச்சர்கள் பெரும்பாலும் நாளை திங்கட்கிழமை தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடும் என்று அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்தில் தமது அமைசசுப் பதவிகளை ஏற்றுக்கொள்வதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் - சந்திரசேகரன் நேற்றுத் தெரிவித்தார்.

கண்டியில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் அமைச்சரவை ஒதுக்கீடு தொடர்பாக இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் எந்தவிதமுடிவும் எடுக்கப்படாததே இந்தப் பதவியேற்பு தாமதமடைவதற்கு காரணமெனவும் அவர் தெரிவித்தார்.

எனவே நாளை இடம்பெறவிருந்த ஜே.வி.பியின் அமைச்சுப் பதவிப் பொறுப்பேற்பு நடைபெறுவது சாத்தியமில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாய அமைச்சுக்குள் மகாவலித்துறையும் இணைக்கப்பட வேண்டும் என்பதே ஜே.வி.பியின் கோரிக்கையாகும். ஆனால் இதனை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்க தொடர்ந்தும் மறுத்து வருகிறது. இந்தப்பிரச்சினை நீடித்தால் இதன் தாக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றில் பிரதிபலிக்கும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்போதைய நிலை குறித்து ஜே.வி.பியினர் தீவிரமான ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

# வயது குறைந்த...

சம்பூரில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.திலக், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் கோ.மாதவராசா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

யுனிசெப் நிறுவனத்தாரிடம் ஒப்படைப்பதற்காக அழைத்துவரப்பட்ட சிறுமிகள் தாங்கள் அணிந்திருந்த இடுப்புப்பட்டியை அகற்ற மறுத்துவிட்டனர்.

இதனை அகற்ற வேண்டுமாயின் தாங்கள் வீடுகளுக்குச் செல்லவில்லை என விடுதலைப் புலிகளிடம் எடுத்துரைத்தனர். இடுப்புப் பட்டியுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் செல்ல இராணுவத்தினரால் அனுமதிக்கப்படமாட்டீர்கள்.

எனவே, இதனை கழற்றி எம்மிடம் ஒப்படைத்துவிட்டு செல்லுங்கள் எனக் கூறியும் அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

பின்னர் யுனிசெப் பிரதிநிதிகளும் அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்கும் அவர்களுக்கு விடுதத ஆலோசனையைத் தொடர்ந்து ஒருவர் ஒருவராக இடுப்புப்பட்டியை கழற்றி பொருண்மிய பொறுப்பாளர் தர்மனிடம் ஒப்படைத்தனர்.

விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களில் பாலத்தோப்பூர் என்னும் இடத்தைச் சேர்நத சிறுவன் ஒருவன் அங்கு வந்திருந்த பெற்றோர்களிடம் யுனிசெப் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டான். ஏனையவர்கள் யுனிசெப் பிரதிநிதிகளால் விசேட வாகனத்தில் ஏற்றி அழைத்துச் செல்லப்பட்டனர்.

தம்மிடம் இணைந்த 20 சிறுவர்களை ஒப்படைப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தாலும் 40 சிறுவர்களை அவர்கள் ஒப்படைத்தமையை யுனிசெப் நிறுவனத்தினர் பாராட்டினார்கள். (04)

## அன்னை பூபதி...

மாலை 3 மணிவரை நிகழ்வுகள் இடம்பெறும்.

இதேபோல் ஊர்காவற்றுறையில்- ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கிலும, தென்மராட்சியில் சாவகச்சேரி சங்கத்தானை முருகன் கோவிலடியிலும், வேலணையில் ஐயனார் சனசமூக நிலையத்திலும் அடையாள உண்ணாவிரதமும், பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளன.

## கண்காணிப்புக்குழு....

நிலைமைகள், பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் தொடர்பாகப் பேசப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளுடன் சந்திப்பு இடம்பெற இருந்தபோதும், நேற்றைய சிறுவர் கையளிப்பு நடைபெற்றமையினால் இந்தச்சந்திப்பு கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (04,10)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1606 திகதி: 16.04.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| T | 7 | 6 | 2 | 8 | 6 | 9 |

324, Palaly Road, Jaffna.

MOBILE NET MCS COMPUTER SERVICES

BIT

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்



கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு

விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- பரீட்சைகள் யாவும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும்.
- விண்ணப்பிப்போர் O/Lஇல் கணிதபாடத்தில் தேகைமையுடன் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  - (O/Lஇல் தேகைமை பெறாதோர் A/Lஇல் Maths அல்லது Bio பிரிவுகளில் அல்லது பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். Economics, Logic, Commerce, Accounts, Business Statistics, Geography)
  - (2004இல் A/Lபரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம், ஆயினும் 2004 Sep. இல் மேற்குறித்த தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்)
- கற்கை நெறிக்கான மாணவர்கள் தெரிவுப்பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் MCS நிறுவனத்தில் இலவசமாக நடாத்தப்படும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் வழங்கப்படும். (Certificate in Information Technology)
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 22-04-2004

விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும்,

MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

CATWAS.COM

Computer Academyயில் அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சிங்கள, தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு அடுத்த பிரிவு 01.05.2004 அன்று ஆரம்பம்.

Diploma Courses

Ms Office 1,000/-

DTP 1,500/-

Hardware 1,500/-

Web page 1,500/-

இப்பிரிவில் இணையும் மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் முற்றிலும் இலவசம்.

26, Somasundaram Avenue, Chundukuli, Jaffna. T.P: 021-222 3805

(சி/2470)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.